சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



“நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு.”

# மாதா பரிகார மலர்

## கிறீஸ்து இராஜா வாழ்க!


செப்டம்பர் & அக்டோபர் – 2022
மலர் 43 இதழ் 9 & 10
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.15.00




“ஆண்டவர் என்றென்றைக்கும் இராஜாவாக வீற்றிருப்பார் ...
ஆண்டவர் தமது பிரஜைகளுக்குச் சமாதானத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பார் ...”
(சங். 28:10-11)

# "ஜெபமாலை ஜெயமாலை"

சேசு மரி சூசையில் மிகவும் பிரியமானவர்களே!

இந்த மரியாயின் இதழ் தங்களின் கரங்களிலே கிடைக்கும் போது பரலோகத்துக்கும், தேவ தாயுக்கும் மிகவும் பிரியமான பரிசுத்த ஜெபமாலை மாதாவின் மாதத்திலே தேவமாதாவுடன் நீங்களும் இந்த ஜெபமாலையை ஜெபித்துக் கொண்டிருப்பீர்கள். திவ்விய பலிபூசைக்கு அடுத்ததாக பல பரிசுத்த பாப்பரசர்கள் மிகவும் நேசித்த **"ஜெபமாலை ஜெபமானது"** திருச்சபையில் இருள்சூழ்ந்த வேளையில் பரலோக ஒளியை மீண்டும் திருச்சபையின் மீது வீசச் செய்யும் சுபாவத்துக்கு மேற்பட்ட பரலோக ஆயுதமாகும்.

ஒருநாள், முத். ஆலன் ரோச் என்பவருக்கு தேவதாய் தோன்றி "தேவ வார்த்தையானவரை மனிதாவதாரம் எடுக்கச் செய்யவும், மானிட இரட்சண்யத்தைக் கொண்டு வரவும் சர்வேசுரன் எவ்வாறு சம்மனசின் மங்கள வார்த்தையை உபயோகித்தாரோ, அதைப் போலவே ஞான சீர்திருத்தத்தைக் கொண்டுவர விரும்புகிறவர்களும், சேசு கிறீஸ்துவில் மாந்தர் மறு பிறப்படைய வேண்டும் என ஆசிப்பவர்களும், என்னை மகிமைப்படுத்தி அதே மங்கள வார்த்தையை எனக்குக் கூறவேண்டும்" என்று அறிவித்தார்கள்.

இவ்வார்த்தைகள் கடவுளின் விருப்பத்தை நம் தேவதாய் வழியாக நமக்கு தெரிவிக்கின்றன. இரட்சண்யத்தை உறுதிப்படுத்த தேவதாயின் ஜெபமாலை மீதுள்ள பிள்ளைகளுக்குரிய பக்தி மிகவும் உதவியாக உள்ளது. நவீனம் என்கிற அசுத்த பசாசின் தப்பறைகளின் தாக்குதலிலிருந்து நம்மைக் காப்பாற்ற **குடும்ப ஜெபமாலை** மிகவும் அவசியமாகத் திகழ்கிறது. பரிசுத்த ஜெபமாலையும், கார்மெல் மாதாவின் உத்தரியமும் நரகத்தில் விழாமல் நம்மைத் தடுத்து மோட்சம் செல்ல அவசியமான இரு பரலோகத்தினுடைய ஆயுதங்கள் ஆகும்.

**ஆசீர்!**

சேசு மரிய சூசையில் உங்கள் ஆன்ம குரு,
Rev. Fr. **ஜோசப் ராஜதுரை,** SSPX
பாளையங்கோட்டை, தமிழ்நாடு.

# கிறீஸ்து அரசர் !

**"ஆண்டவர் என்றென்றைக்கும் இராஜாவாக வீற்றிருப்பார். ஆண்டவர் தமது பிரஜைகளுக்குச் சமாதானத்தைக் கொடுத்து. . ஆசீர்வதிப்பார்."** (சங் 28 : 10-14)



*1925- ம் வருடம் டிசம்பர் 11-ம் நாளன்று பாப்பரசர் 11-ம் பத்திநாதர் சேசுகிறீஸ்து* **'அரசர்'** *என்பதையும், அவருடைய ஞான ஆட்சியின் உந்நதத்தையும் குறிப்பிட்டு "க்வாஸ் ப்ரிமாஸ் - Quas Primas" என்னும் அப்போஸ்தலிக்க மடலை வெளியிட்டார். அதில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் கடைசி ஞாயிறை கிறீஸ்து அரசரின் திருநாளாக அனுசரித்து அவரது இராஜரீக உரிமைகளை கிறீஸ்தவர்களாகிய அவரது பிரஜைகள் அங்கீகரித்து, மகிமைப்படுத்த அழைப்பு விடுத்தார். ஏனெனில் அக்காலத்தில் உலகமெங்கிலும் கடவுள் மறுப்பு லோகாதாய கம்யூனிச சித்தாந்தங்கள் ரஷ்யாவிலிருந்து வேகமாகப் பரவி கிறீஸ்தவ அரசாங்கங்களை நிர்மூலமாக்கி வந்தன. கிறீஸ்தவ நாடுகளில் கிறீஸ்துவின் ஞான ஆட்சி பரிகசிக்கப்பட்டு வந்தது. இதனால் உத்தம கிறீஸ்தவ அரசுகள் வலுவிழந்து மறையத் தொடங்கியிருந்தன.*

*அச்சமயத்தில், சேசுகிறீஸ்துவின் தெய்வீகத்தையும், அவரது அரச உரிமைகளையும், மீண்டும் உலகில் ஸ்தாபிக்க மக்களைத் தூண்டும் வகையில் பாப்பரசர் இந்த திருநாளை ஏற்படுத்தினார்.* **கிறீஸ்து மெய்யான தேவன் ; நமது இராஜா** *என்ற சத்தியத்தை திருச்சபை எக்காலத்திலும் அங்கீகரித்து விசுவாசிகளுக்கு, அச்சத்தியத்தைக் கற்பித்து வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகவே பாப்பரசரின் இந்த முயற்சி அமைந்திருந்தது.*

## கிறீஸ்து நித்தியத்திற்கும் அரசர் !

*நமது ஆண்டவரும் மீட்பருமான சேசு கிறீஸ்துநாதர் மெய்யாகவே அரசராக இருக்கிறார். அவர் நித்தியத்துக்கும் அரசராகவே இருக்கிறார். மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனிதருமான அவர், தமது தேவ சுபாவத்தில் பிதாவோடும், இஸ்பிரீத்துசாந்துவோடும் நித்தியத்தில் சகலத்திலும் அவர்களுக்குச் சரிசமானமானவராயிருக்கிறார். ஆகையால், தேவ சுபாவத்தில் அவருடைய இராஜத்துவம் தெளிவாகத் துவங்குகிறது.*

*அர்ச். அருளப்பர் தமது சுவிசேஷத்தின் தொடக்கத்தில் இந்த சத்தியத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.*

**"ஆதியிலே வார்த்தையிருந்தார். அந்த வார்த்தை சர்வேசுரனிடத்திலிருந்தார். அந்த வார்த்தை சர்வேசுரனாகவும் இருந்தார். அவர் ஆதியிலே சர்வேசுரனிடத்திலிருந்தார். அவர் மூலமாய் சகலமும் உண்டாக்கப்பட்டதொழிய உண்டாக்கப்பட்டவைகளில் எதுவும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை" (அரு 1 : 1-3)**

*மேலும், அர்ச். சின்னப்பர் கொலோசியருக்கு எழுதிய நிருபத்தில் இப்படிக் கூறுகிறார். "அதெப்படியெனில், பரலோகத்திலும், பூலோகத்திலும் காணப்பட்டவைகளும், காணப்படாதவையுமான சகலமும் இவருக்குள் சிருஷ்டிக்கப்பட்டது. பத்திராசனரோ நாதகிருத்தியரோ, பிராதமிகரோ, பலவத்தரோ சகலமும் இவர் மூலமாயும், இவருக்கென்றும் உண்டாக்கப்பட்டன" (கொலோ 1 : 13)*

*மேற்கண்ட இரண்டு சுவிசேஷ வாக்கியங்களால், பிதாவாகிய சர்வேசுரன் சகலத்தையும் தமது வார்த்தையால் சிருஷ்டித்தார். ஆனால், பிதாவின் சுதனே வார்த்தையாக இருப்பதால், சகலமும் சுதனால், அவருக்காகவே தான் சிருஷ்டிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. இவ்வாறு சகலத்தையும் சிருஷ்டித்த கிறீஸ்து சகலத்துக்கும் அதிபதியாக இராஜாவாக இருக்கிறார்.*

## கிறீஸ்து பரிபூரண இராஜா !

*இப்போது, நமதாண்டவர் தமது மானிட சுபாவத்திலேயும், சகலத்துக்கும் சமஸ்த பரிபூரண ராஜாவாக இருக்கிறார் என்பதைப் பார்ப்போம். சேசுகிறீஸ்துநாதர் சுவாமி தேவ சுபாவமும், மனித சுபாவமும் கொண்ட* (Hypo - static union) *ஒரே ஆளாக இருக்கிறார். நித்தியத்தில் தேவபிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்ட மெய்யான கடவுளான அவர், காலத்தில் பரிசுத்த கன்னித்தாயின் உதரத்தில் உற்பவமான மெய்யான மனிதனுமாய் இருக்கிறார். அர்ச். தமத்திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனான அவரே மனித சுபாவமெடுத்து ஒரே ஆளாக இருப்பதையே* **திரு அவதாரப் பரம இரகசியம்** *என்று கூறுகிறோம்.*

*ஆகவே பரலோக பூலோகவாசிகள் யாவரும் கிறீஸ்துவைக் கடவுளென ஆராதிக்கவும், பரலோக பூலோகத்திலுள்ள சிருஷ்டிக்கப்பட்ட சகலமும், மனிதனான கிறீஸ்துவின் ஆளுகைக்குட் பட்டவையாகின்றன. எனவே அவர் அவர்களில் அரசராகிறார்.*

*மேலும், விளக்குவோமேயானால் மனிதராய் கிறீஸ்துவின் சகல செய்கைகள் மனிதனாகிய மட்டும் மனிதக் கிரியைகளாகவும் அர்ச். தமத்திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரனாகிய மட்டும் தெய்வக்கிரியைகளுமாகின்றன. இந்த தேவ மானிட ஒன்றிப்பினால் மனிதாவதாரத்தின் நோக்கத்துக்குப் பொருத்தமான சகல மாட்சிமை மனிதனாகிய மட்டும் கிறீஸ்துவுக்கு முற்றிலும் சொந்தமானதே. இத்தகைய மாட்சிமையானது படைக்கப்பட்ட சகல வஸ்துக்கள் மேல் பரிபூரண சுதந்திரமும் (உரிமை) மனிதர், சம்மனசுக்கள் மேல் நித்திய இராஜத்துவமும், மானிடரான கிறீஸ்துவுக்கு உரியதல்லவா?*

## பிறப்பின் வம்சத்தின்படி இராஜா !

*சேசுகிறீஸ்துநாதர் அவரது தேவ மானிட ஒன்றிப்பில் மட்டுமல்லாது, அவரது பிறப்பின் வம்சத்தின்படியும் இராஜ வம்சத்தில் உதித்தவர். இது எப்படியென்று பார்ப்போம் : அர்ச். மத்தேயு தமது சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் கிறீஸ்துநாதருடைய வம்ச வரிசையைக் கூறும்போது, இராஜாக்களின் வரிசையில் முதலில் தாவீது ராஜாவை இவ்வாறு குறிப்பிடுகிறார்.* **"ஜெஸ்ஸேயோ தாவீதரசனைப் பெற்றார். . . "** *(மத் 1 : 5)*

*இதனால் சேசுகிறீஸ்து தாவீதரசரின் குமாரனென்று அழைக்கப்பட்டார். மெசையாவான அவரை இசையாஸ் தீர்க்கதரிசி, "அவர் தாவீதனின் சிங்காசனத்தின் மீதும், அவரது இராச்சியத்தின் மீதும் உட்காருவார்" (இசை 9 : 7) என்கிறார்.*

மேலும், அரசர் பட்டியலில் தாவீதுக்கு மட்டுமே இராஜா என்றும் பட்டம் வெளிப்படையாகக் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில், தாவீதரசன், கிறீஸ்து ராஜாவின் மகிமை, வல்லபம், தாழ்மை ஆகிய சற்குணங்களைப் பூண்டு விளங்கினார். மனுக்குல ராஜாவானவர் இராஜ வம்சத்தைச் சேர்ந்த குடியில் பிறந்த கன்னிகையில் வயிற்றில் உதிக்கச் சித்தமானார்.

## கிறீஸ்து, பிதாவின் மகிமையால் அரசர் !

சேசு கிறீஸ்து தமது இராஜரீக உரிமையை பிதாவாகிய சர்வேசுரனிடமிருந்து பெற்றுக் கொண்டார். எப்படி? "வார்த்தையானவர் மாமிசமாகி, இஷ்டப்பிரசாதமும், சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவின் ஏக சுதனுக்குரிய மகிமைக்கு நிகராயிருந்தது." *(அரு 1 : 14)*

ஆக, சுதனானவர் மனிதாவதாரம் எடுத்தபோது, மனித சுபாவத்துக்குரிய இராஜ மகிமை முற்றிலும் பிதாவிடமிருந்து பெற்று அரசராகத் திகழ்கின்றார்.

மேலும், கிறீஸ்து தமது ஜென்ம உரிமையால் சகல சிருஷ்டிகளின் வணக்கத்துக்கும் ஆராதனைக்கும் தகுதியாகிறார். **"அன்றியும் தாம் முதலில் ஜெனிப்பித்தவரை தேவதூதர்கள் அனைவரும் அவரை நமஸ்கரிப்பார்களாக . . ."** *(எபிரே 1 : 6)*

**"பரலோகத்திலும், பூலோகத்திலும் எனக்கு சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. . ."** *(மத் 28 : 17)*

"ஏனெனில் (சர்வேசுரன்) சகலத்தையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்" *(1 கொரி 15 : 26)*

ஆகையால், மனிதனான கிறீஸ்து மெய்யான கடவுளுமாயிருப்பதால், (அவர் பிதாவினிடமிருந்து ஜெனிப்பிக்கப்பட்டதால்) அந்த ஜென்ம உரிமையால் மெய்யாகவே அரசராக இருக்கிறார் என்று நிச்சயிக்கலாம்.

## அழைப்பு !

நேயர்களே ! மாதா அப்போஸ்தலர்களே ! நமதாண்டவரின் தெய்வீகமும் அவரது இராஜரீகமும் இன்று திருச்சபையிலும், உலகிலும் மறைக்கப்பட்டு, மறுக்கப்பட்டு வருகிறது. ஆதலால், அவரது பிரமாணிக்கமுள்ள மக்களாகிய நாம், நமது மீட்பரும் ஆண்டவருமாகிய சேசு கிறீஸ்து மெய்யாகவே அரசராக இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்வோமாக. அரசருக்கரசரான அவரை ஒவ்வொரு கணமும் ஆராதித்து வந்திப்போமாக! அவர் நமது இருதயங்களையும் இல்லங்களையும் ஆட்சி செய்ய அவருக்கு நம்மையே அர்ப்பணிப்போமாக.

உலகில் அவரது அரசு மகிமையோடு மீண்டும் துலங்கி விளங்க மன்றாடுவோமாக. அவருக்கு பிரமாணிக்கமுள்ள மக்களாக வாழ்ந்து அவரது இராச்சியம் உலகில் மலர உழைப்போமாக !.

## கிறீஸ்து அரசர் வாழ்க ! உமது அரசு வருக !!

- மரியாயே வாழ்க.!

# “நான் ஜெபமாலை மாதா !”



1917 அக்டோபர் 13-ம் நாளன்று பாத்திமா இறுதிக் காட்சி நடைபெற்றது. அப்போது தேவதாய் தாம் முந்தைய காட்சிகளில் வாக்களித்தது போலவே தமது பெயரை வெளியிட்டார்கள்!

## “. . . நான் ஜெபமாலை மாதா !”

தேவ அன்னை தம்மை ‘ஜெபமாலை மாதா’ என்று அறிவித்தது மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகிறது. லூர்துபதியில் காட்சியளித்த போது நாமே ‘அமலோற்பவம்’ என்று கூறி தமது பாவமில்லாத தன்மையை பறைசாற்றினார்கள் பாத்திமாவில் ஜெபமாலை ஜெபத்தின்மீது தாம் கொண்ட பற்றுதலை வெளியிட்டார்கள். பொதுவாக தங்களுக்குப் பிடித்த ஊர்களையோ, நபர்களையோ தமது பெயருடன் இணைத்துக் கூறும் பழக்கம் உலகில் காணப்படுகிறது. அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட், “மோன்போர்ட்” என்ற தமது ஊரை தமது பெயரோடு இணைத்துக் கொண்டார். அர்ச். அவிலா தெரேசம்மாள் தம்மை “சேசுவின் தெரேசாள்” என்றும், லீஸியே நகர் கார்மெல் அர்ச். தெரேசாள் தம்மை “குழந்தை சேசுவின் மற்றும் திருமுகத்தின் தெரேசாள்” என்றும் தம்மையே அழைத்துக் கொண்டதை நாம் அறிவோம் !

பாத்திமாவில் தேவதாய் தம்மை ‘ஜெபமாலை மாதா’ என்று அழைத்துக் கொண்டதற்கு அந்த ஜெபத்தின் மீது அவர்களுக்கும் இருக்கும் பிரியம் மட்டும் காரணமல்ல. மாறாக அச்செபமுறை கொண்டிருக்கும் வல்லமையையும், விசுவாசிகளான தமது மக்கள் அச்செபமாலையை சொல்வதன்மூலம் அடையும் அபரிமிதமான வரப்பிரசாத நன்மைகளையும் முன்னிட்டே அவ்வாறு தன்னை அழைத்துக் கொண்டார்கள் என்பது தான் உண்மை.

## வல்லமையுள்ள ஆயுதம் ஜெபமாலை !

தேவதாய் “ஜெபமாலை மாதா” என்ற தமது பெயரின் வழியாக ஜெபமாலை ஜெபத்தின் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அதனால் தான் பாத்திமாவின் ஆறு காட்சிகளிலும் **தினமும் ஜெபமாலை சொல்லிவரும்படி கேட்டுக் கொண்டார்கள்.**

தேவதாயால் அர்ச். சாமிநாதருக்கு வழங்கப்பட்ட ஜெபமாலை ஜெபமுறையின் வல்லமையைத் திருச்சபையின் வரலாற்றிலிருந்து அறிந்திருக்கிறோம். அவற்றில் சில :

1. 13-ம் நூற்றாண்டில் அர்ச். சாமிநாதரின் மூலமாக தேவதாய் வழங்கிய ஜெபமாலையின் வல்லமையால் அவர், கொடிய ஆல்பிஜென்ஸிய பதிதத்தை முறியடித்தார்.

2. 16-ம் நூற்றாண்டில் கிறீஸ்தவப் படைக்கு ‘லெப்பான்றோ’ என்ற இடத்தில் ஜெபமாலை ஜெபவலிமையால் அற்புத வெற்றி கிடைத்தது. இதனால் கிறீஸ்தவ ஐரோப்பிய நாடுகள் தப்பின!.

அதோடு பல்வேறு காலக்கட்டங்களில் கிறீஸ்தவமக்களை, கம்யூனிசம், மற்றும் லோகாதாய சாத்தானுக்குரிய கொள்கைகளிலிருந்து காப்பாற்றிய ஜெபமாலை! என்று இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். ஆக, ஜெபமாலை கத்தோலிக்க மக்களுக்கு தேவதாய் தந்த வல்லமையுள்ள ஆயுதம் என்றால் மிகையாகாது!

★ ஜெபமாலை ஜெபம் தேவதாய் கடவுளோடு கொண்டுள்ள மத்தியஸ்தத்தின். வல்லமையைக் காட்டுகிறது.

★ ஜெபமாலை சர்வேசுரனை மகிழ்வித்து அவரிடமிருந்து அளவற்ற வரப்பிரசாதங்களை பெற்றுதருகிறது.

★ ஜெபமாலை செபத்தால் விளைந்த வெற்றிகள் மாமரித்தாயின் மன்றாட்டின் உரிமையைச் சுட்டிக் காட்டுகின்றன. அன்று கானாவூரில் சேசுகிறீஸ்துவின் முதல் புதுமையை மாதாவின் பரிந்துரை செயல்படுத்தியது போலவே, இக்காலத்தில் ஜெபமாலை ஜெபம் அளவில்லாத புதுமைகளை - தேவ ஆசீர்வாதங்களை நமக்குப் பெற்று தருகிறது.

இதனாலேயே தான் பாத்திமா காட்சி பெற்ற சகோதரி லூசியா **“பரிசுத்த கன்னிகை, ஜெபமாலையை ஜெபிப்பதில் ஒருபுதிய பலனை வழங்கியுள்ளார்கள். அது எந்த அளவிற்கென்றால் ஒரு பிரச்சனை, அது எவ்வளவு கடினமாக இருந்தாலும், லௌகீக விஷயமாக இருந்தாலும் சரி குடும்பங்களிலானாலும் சரி, ஜெபமாலையால் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையும் இல்லை. . . ஜெபமாலையைக் கொண்டு நாம் நம்மையே காப்பாற்றிக் கொள்ளவும், அர்ச்சித்துக் கொள்ளவும், நமதாண்டவருக்கு ஆறுதலளிக்கவும், அநேக ஆன்மாக்களின் இரட்சண்யத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் . . .”** என்று கூறியுள்ளாள். (1957, டிசம்பர் 26-ல் சங் ஃபுவெந்தெஸ் சுவாமிக்கு வழங்கிய பேட்டி - The whole Truth about Fatima III. P 507)

இந்த வல்லமையுள்ள ஜெபமாலை ஜெபத்தை ஆபத்துக்கள் நிறைந்த இவ்வுலக வாழ்வில் நமது ஆயுதமாகக் கொண்டு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நமதன்னை கன்னிமாமரி தன்னை **“ஜெபமாலை மாதா”** என்று அழைத்து நமக்கு உணர்த்துகிறார்கள்.

எனவே தேவதாய் தந்த இந்த வல்லமையுள்ள ஆயுதமாகிய ஜெபமாலையை கையில் ஏந்தி, தினமும் அதனை ஜெபித்து,

**எங்களின் ஜெபமாலையின் இராக்கினியே வாழ்க !**

என்று தேவதாயை வாழ்த்துவோமாக!

அவர்களின் அடைக்கலத்தில் நம்மையே வைப்போமாக!

- மரியாயே வாழ்க.!

# தேவ மாதாவை அறிந்து கொள்வோம்!

**(தேவ மாதாவை நம்மால் அறிந்து கொள்ள முடியுமா?. "முடியாது !" என்கிறார்கள் அர்ச்சிஷ்டவர்களும், தேவபாரகர்களும். இவ்வுலக ஜீவியத்தில் அத்தாயை அறிந்து கொள்வது என்பது இயலாத காரியம். அதற்கு நாம் மோட்சத்திற்குத் தான் செல்ல வேண்டும். ஆனால் அந்த தாய், நமக்கும் தாயார் என்ற உரிமை உள்ளபோது, அவர்களை சற்று அறிந்து கொள்ள முயலலாம் தானே? அதன் முயற்சிதான் இந்தக் கட்டுரைத் தொடர் ! . ஆ.ர்.)**

## எட்டாம் சலுகை

## மாதா சகல மனிதர்களுக்கும் தாயாக இருக்கும் மகிமை !



"... சேசுநாதர் தமது தாயாரையும் அங்கு நின்ற தம்மால் சிநேகிக்கப்பட்ட சீஷனையும் கண்ட போது, தம்முடைய தாயாரை நோக்கி, **"ஸ்திரியே, இதோ உன் மகன்"** என்றார். . . . . அந்நேர முதல் அந்த சீஷன் அவளைத் தன் இல்லத்தில் ஏற்றுக் கொண்டார்." (அரு 19 : 26, 27)

சேசு சபைப் புனிதர் ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா அடிக்கடி சொல்லுவார் "கடவுளின் தாய் என்னுடைய தாய்" என்று! நாம் அனைவருமே இதை முழு உண்மையுடன் சொல்லலாம். ஏனெனில் தேவ அன்னை மாமரி நம் அனைவரின் தாயாக இருக்கிறார்கள்.

மனிதன் ஆன்மசரீரம் உடையவன். இதில் ஆன்மா தான் முக்கியமானது. ஆன்மா இல்லாமல் சரீரம் வாழாது. ஆனால், சரீரம் இறந்தாலும் ஆன்மா வாழும். நம் உலகத் தாய்மார்கள் சரீரப் பிரகாரமே நமக்குத் தாயாயிருக்கிறார்கள். நம் பரலோகத்தாயோ நமது ஆன்மீக அன்னையாயிருக்கிறார்கள். இந்த இரண்டு தாய்மையிலும் மாதாவின் தாய்மையே சிறந்தது. நம் இரண்டு தாய்மாரிலும் மாமரி தாயே சிறந்தவர்கள்.

சிருஷ்டிப்பில் நாம் காண்பவை கடவுளுடைய எண்ணற்ற இலட்சணங்களின் பிரதிபலிப்பாகவே இருக்கின்றன. "கண்ணுக் கெட்டாத அவருடைய இலட்சணங்கள் . . . சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களாலே புத்திக்கு எட்டும்படியாகி, அவருடைய நித்திய வல்லமையையும் தெய்வீகத்தையும் விளங்கப் பண்ணுகின்றன" (உரோ 1:20) என்று அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கூறுகிறார். ஆகவே சுபாவ இயற்கையில் நாம் காண்கிறவைகள் சுபாவத்துக்கு மேலானவற்றின் மாதிரிப்படியே, அமைந்துள்ளன.

இதனால், உலகத்தில் நாம் பிதாத்துவம் அல்லது தந்தைமை (Father hood) என்பது பரம பிதாவின் தந்தைமையின் எதிரொலிப்பேயாகும்.

அதுபோலவே உலகத்தில் நாம் தாய்மை (Mother hood) என்பது மாதாவின் தாய்மையின் எதிரொலிப்புத் தான்.

இப்படியிருப்பதால் மாதாவின் தாய்மையைப் பற்றி அறிவதற்கு, உலக தாய்மையைப் பற்றி அறிவது மிக அனுகூலமாயிருக்கும். சுபாவத் தாய்மையிலிருந்து சுபாவத்துக்கு மேலான மாதாவின் தாய்மையை - அவர்களின் ஞானத்தாய்மையை (Spiritual Motherhood) - நாம் புரிந்து கொள்ள முடியும்.

## சுபாவ இயல்புப்படி தாய்மை

சுபாவ இயல்பில் தாய் என்பவள் யார்? தன்னிடமிருந்தே தன்னைப்போன்ற உயிருள்ள பொருளை உற்பத்தி செய்கிறவளே தாய். அதாவது குழந்தையைத் தன் உதரத்தில் தாங்கி பெற்றெடுப்பவள்.

தாயிடமிருந்து நீக்க முடியாத அலுவல்கள் எவை? தன் குழந்தைக்கு உணவூட்டி வளர்த்து, அறிவூட்டி ஆளாக்கும் அலுவல்கள். தாயின் அலுவல்களாகும்.

## நமது ஞானப்பிறப்பும், நம் ஞான அன்னையும்.

கடவுளின் திட்டப்படி, மானிட வளர்ச்சியின் முழுமையை நாம் அடைவதற்கு மானிட பிறப்பையும், இவ்வுலகைச் சார்ந்த வளர்ச்சியையும் அடைந்தால் மட்டும் பற்றாது. இந்தப் பிறப்பைவிட இன்னொரு பிறப்பையும் நாம் அடைய வேண்டும். "ஒருவன் மறுபடியும் பிறவாதிருந்தால் . . . ஜலத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் மறுபிறப்படையாதிருந்தால் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் நுழைய மாட்டான்" (அரு 8 : 3-5) என்று நமதாண்டவர் கூறுகிறார்.

மேலும் மனிதன் இம்மறுபிறப்பினால், ஒரு புது சிருஷ்டி ஆகவேண்டும். மாமிசத்தின்படி பிறந்தவன், பரிசுத்த ஆவியின்படி பிறக்க வேண்டும். "மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாம். ஆவியினால் பிறந்தது ஆவியாகும்." (அரு 3 : 6)

சேசுவின் தாய் நம்முடைய தாயாகவும் இருக்க வேண்டுமானால், அவர்கள் நம்மையும் சேசுவுடன் ஞான ரூபமாய்த் தன் உதரத்தில் தாங்கி பெற்றெடுத்து உணவூட்டி ஆளாக்க வேண்டும். ஞானரூபமாய் என்றால் சுபாவத்துக்கு மேலான ஆன்மீக முறையில் என்று அர்த்தம். மாதா இவைகளை நமக்குச் செய்யவேண்டும். மாதா அப்படிச் செய்கிறார்களா? நிச்சயமாக செய்கிறார்கள் !

இப்படி பரிசுத்த ஆவியினால் பிறப்பிக்கப்பட்டவனே புது கிருஷ்டியாகிறான். "இதுமுதல் நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் . . . ஒருவன் கிறீஸ்து நாதரிடத்தில் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான்" (IIகொரி 5 : 16,17) என்கிறார் அர்ச். சின்னப்பர்.

இந்தப் புது சிருஷ்டியின் பிறப்பிலும் முழுமையான வளர்ச்சியிலும் மாதாவின் பங்கென்ன? நாம் ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியினால் புதுப்பிறப்பு அடைந்து புது சிருஷ்டியானோமே அது மாதாவின் ஞானத் தாய்மையினால் நடந்ததா? நாம் ஞான வாழ்வில் வளர்ந்து "கிறீஸ்துவின் வயது"க்கேற்ற முழு வளர்ச்சியடைவதும் இத்தாயினால் நடைபெறுகிறதா?

ஆம் ! - அது எவ்வாறு எனக் காண்போம்.

## மாதா நம் ஞான அன்னை என்பதன் விளக்கம்.

ஒரு தாய் தன்னிடமிருந்தே தன் குழந்தை உருவாவதற்குரிய பொருளை சரீரப் பிரகாரமாய் வழங்குகிறாள்.

இதேபோல ஞானவிதமாய் உருவாவதற் குரிய பொருளை நம் தேவ அன்னை ஞானப்பிரகாரமாய் தன்னிடமிருந்தே வழங்குகிறார்கள்.

அந்த ஞானப் பொருள் தான் தேவ வரப்பிரசாதம். தேவ வரப்பிரசாதமாகிய அருளினால் சம்பூரணமாய் நிறைந்திருந்தார் சேசு. அவர் அதை நமக்குத் தந்தார். "நாம் எல்லோரும் அவருடைய சம்பூரணத்திலிருந்து அருளுக்கு மேல் அருளைப் பெற்றுக் கொண்டோம்" *(அரு. 1: 16)*

எப்படிப் பெற்றுக் கொண்டோம்.? சேசுவின் வரப்பிரசாத சம்பூரணத்தினால் சம்பூரணமாக நிறைந்திருக்கும் மாமரியின் வழியாகவே பெற்றுக்கொண்டோம் !.

மாதா ஒரு வாய்க்கால் போலிருந்து இந்த வரப்பிரசாதத்தை நமக்குத் தருகிறார்களா? இல்லை. மாதா சேசுவின் வரப்பிரசதங்களால் எவ்வளவுக்கு சம்பூரணமாக நிறைந்திருக் கிறார்கள் என்றால், அவர்களே அவற்றின் முழு உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். கிறீஸ்துவின் சம்பூரணம் அனைத்தும் மரியாயினுடையதாக இருக்கிறது. அவர்கள் அதை தன் சொந்தப் பொருளாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு தன் சொந்தப் பொருளை தன்னிடமிருந்தே நாம் ஞானப் பிறப்படையும்படி வழங்குகிறார்கள்.

ஆயினும், ஞான வரப்பிரசாதம் ஒரு பொருளைப் போல் எடுத்துக் கொடுக்கப் படுவதல்ல. அது ஒரு குணம் என்று அர்ச். தாமஸ் அக்வினாஸ் என்ற வேத சாஸ்திரி தெளிவாகக் கூறுகிறார். இந்தக் குணம் ஆன்மாவில் உற்பத்தியாக்கப்படுகிறது. மாதா தன்னுடையதான ஞானப்பொருளை, அதாவது நமக்கு மறுபிறப்பளிக்கும் வரப்பிரசாதத்தை, நம் ஆன்மாவில் உற்பத்தியாக்குகிறார்கள்.

உலகத்திலுள்ள ஒரு தாய் தன்னிடமிருந்தே தன் குழந்தையை உருவாக்கும் பொருளைக் கொடுத்தாலும், அதை உற்பத்தி செய்வதில்லை. அது அவளுடைய சக்தியில் இல்லை. ஆனால், நம் தேவதாய் நாம் ஞானப்பிரகாரம் உருவாகும் தேவ அருளென்னும் பொருளை தன்னுடையதிலிருந்து நம் ஆன்மாவில் உற்பத்தி செய்கிறார்கள். ஆதலால், உலகத் தாய்மையை விட நம் மாதாவின் ஞானத்தாய்மை அளவற்ற விதமாய் சிறப்புப் பெறுகிறது.

## மாதாவில் தெய்வ - மானிட ஐக்கியம் !

நம் தேவ அன்னை உண்மையாகவே மனுக்குலத்தை வரப்பிரசாத வாழ்வுக்கு தன் சொந்த செயலால் பிறப்பிக்கிறார்களென்றால் - இல்லாவிட்டால் மாதா சகல மனிதர்களுக்கும் தாய் என்று கூற இயலாதே ! - கடவுளின் விசேஷ கிருபையால் மாதாவில் தெய்வ மானிட ஐக்கியம் நிறைவேறி, அதன் ஆற்றலினாலேயே அவர்கள் நம்மைப் பிறப்பிக்கிறார்கள் என்று, அநேக வேத சாஸ்திர நிபுணர்கள் கருத்துக் கொண்டுள்ளார்கள்.

சேசு தான் தெய்வ - மனிதன். தாம் மனிதனாவதற்கு அவர், தன் திருமாதாவைத் தான் தன்னுடன் பிரிக்கப்பட முடியாதவாறு இணைத்துக் கொண்டார். மாதாவில் மானிட சுபாவத்தையே சேசு தம் தெய்வீகத்துடன் இணைத்தார். இதுவே Hypo - static union அல்லது தெய்வ - மானிட ஒன்றிப்பு என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு சேசுவுடன் மாதா இணைக்கப் பட்டிருப்பதனாலேயே அவர்கள் இணை இரட்சகியாக இருக்க முடிந்தது. வரப்பிரசாதங் களின் மத்தியஸ்தியாகவும் இருக்க முடிகிறது.

மாதா கடவுளின் தாய் என்று சொல்லும் போது, அவர்கள் ஏதோ ஒரு புறக்கருவிபோல் சேசுவை உலகிற்கு அளித்துவிட்டு ஒதுங்கிக்

கொண்டார்கள் என்று அர்த்தமல்ல அல்லது சிலர் செய்வதுபோல் ஒதுக்கிவிடப்பட கூடியவர்கள் என்றும் அர்த்தமல்ல. மாதாவுக்குக் கடவுளுடன் சகலத்திலும் ஒரு பாகம் ஏற்படுகிறது. இது அன்பினால் ஆவது. இருதயத்தால் கண்டுபிடிக்கப்படுவது. மூளையின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. விசுவாசக் கண்களுக்குப் புலப்படுவது. அறிவுக்கு எட்டாதது. அகத்தில் நிறைவது. புறத்தில் வார்த்தையால் விவரித்துச் சொல்ல முடியாதது!

மாதாவின் தெய்வீக - மனித ஐக்கியத்தால் பிறப்பிக்கப்பட்ட கத்தோலிக்கக் கிறிஸ்தவனே! நீ யாருடைய பிள்ளையாக இருக்கிறாய் ? நீ யாருடைய மகன்? நீ மாதாவின் மைந்தன் ! போதுமா உன் பெருமை? இதை நினைத்து நினைத்து தாழ்ச்சியினால் நீ இல்லாமல் கரைந்து போய்விடு !!

"இத்தகைய தாய்க்குப் பிள்ளைகளாயிருக்கிற மனிதர்களே ! எங்களுக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையே" என்று சம்மனசுக்கள் நம்மைப் பார்த்துக் கூறுகிறார்கள்.

இந்த நினைத்தற்கரிய **அரிய சலுகையை** நாம் அடையாமல் போகும்படி பசாசுக்கள் உலகத்தில் இடைவிடாமல் சதி வேலை செய்கிறார்கள்.

எப்பொழுதும், மரணம் வரையிலும் மாதாவின் அன்பும், பிரமாணிக்கமும் உள்ள பிள்ளைகளாக நாம் இருக்க அந்த உத்தம அன்னையே உதவுவார்களாக !

"கடவுளின் தாய் என்னுடைய தாய்" என்று எப்பொழுதும் நாம் கூறுவோமாக!

- மரியாயே வாழ்க!

## பறக்கும் புனிதர் !

**"ஒருசமயம் அர்ச். பிரான்சிஸ் அசிசியாரின் திருநாளின் போது நடைபெற்ற பவனியில் பங்கேற்ற குப்பர்த்தீனோ அர்ச். ஜோசப் சர்ப்ளிஸ் அணிந்தவராக பாடற்குழுவோடு பாடிக்கொண்டே சென்றவர், அப்படியே பரவசமானார். அவர் உடல் எடை இலகுவானதைப் போல் மேலே அந்தரத்தில் மிதக்கலானார். தரையிலிருந்து 15 அடி உயரம் மிதந்த அவர் பிரசங்கத் தொட்டி வரை உயர்ந்து முழந்தாலிட்டவராக, கைகளை விரித்து காணப்பட்ட அவர் பிறகு மெல்ல கீழே தாழ்ந்து தன்னிலை அடைந்தார்.**

**இப்படிப்பட்ட வினோதமான பறத்தல் நிகழ்வுகளால் பறக்கும் புனிதர் என்று அழைக்கப்பட்ட அவரை கீழே தாழவரச் செய்ய இல்ல அதிபர் கட்டளையிட நேர்ந்த சம்பவங்களும் உண்டு!**

## மாதா மறுப்பதேயில்லை!

வேறொரு சமயம் சங். பாரெந்தே என்ற துறவி அர்ச். பியோ சுவாமியிடம் "ஏன் ? இத்தனை ஜெபமாலைகள் சொல்கிறீர்கள் ? . . . மற்ற ஜெபங்களும் ஜெபிக்க வேண்டுமல்லவா?" என்று கேட்டார். அதற்கு பியோ சுவாமி "ஆம் ! அவற்றோடு ஜெபமாலைகளை ஜெபிக்கிறேன். ஏனெனில் ஜெபமாலையை ஜெபித்துக் கேட்கிற எந்த வரப்பிரசாதத்தையும் நமதாண்டவள் மறுப்பதே இல்லை ! " என்று பதிலளித்தார்.

**"அர்ச். சூசையப்பரின் புனிதத்தை விசுவாசிகள் கண்டு கொள்ளும்போது, வெற்றியின் முழக்கம் கேட்கப்படும்."** - அர்ச். இஸோலானிஸ் இசிதோர்

# பரிசுத்தமாய் வாழ அர்ச். சூசையப்பரிடம் மன்றாடுங்கள்.



*அர்ச். சின்னப்பர் புலம்புகிறார். "என் மனதிலிருக்கிற இந்த (தேவ) சட்டத்தோடு போராடுகிற வேறொரு சட்டத்தை என் அவயங்களில் காண்கிறேன். அது என் அவயங்களிலிருக்கிற இந்தப் பாவச் சட்டத்திற்கு என்னை அடிமையாக்குகிறது. நிர்பாக்கியப்பட்ட மனிதன் நானே. என்னை யார் இப்படி பாழுஞ் சரீரத்தினின்று விடுவிப்பார்கள்" என்று ! (உரோ 7 : 23,24)*

இதையே நாம் "ஆசாபாசம்" அல்லது "இச்சை" என்கிறோம். ஜென்மப்பாவம் ஞானஸ்நானத்தால் கழுவப்பட்ட பின்பும் நம்மிடம் நீங்காமல் காணப்படுகிற பாவத்தழல் (Fomes Peccati) இது.

*அர்ச். சூசையப்பர் அழைக்கப்பட்டிருந்த உந்நத "கன்னிகையின் காவலர்" என்ற அழைப்பிற்கு அரணாக, அவருக்கு இந்த ஆசாபாசம் என்னும் "பாவச்சட்டத்திலிருந்து" விடுதலைக் கொடுக்கப்பட்டிருந்தது.*

*ஜெர்சன் என்ற வேதசாஸ்திகூறுகிறார் : உத்தமமான கன்னிகையிடத்திலின்றே சேசுகிறீஸ்து பிறக்க சித்தமானது போல, உத்தம விரத்தரான அர்ச். சூசையப்பராலேயே வளர்க்கப்படவும் சித்தமானார் என்று !*

*"எத்தகைய மகிமை பொருந்திய அர்ச்சிஷ்டவர் இவர் ! பிதாப்பிதாவாகிய அவர் கன்னிமை என்றும் சிறந்த புண்ணியத்தில் எல்லா அர்ச்சிஷ்டவர்களையும், சம்மனசுக்களையும் கெரூபிம் தூதர்களையுமே தாண்டிவிட்டார்" என்று அர்ச். பிரான்சிஸ் சலேசியார் வியந்து பாராட்டுகிறார்.*

*அர்ச். சூசையப்பர் நித்திய கன்னிகையான மாதாவுக்குத் திருமணவாளராயிருந்தார் என்ற விசேஷ உண்மையைச் சிந்திக்கிற எந்தக் கிறீஸ்தவனின் உள்ளமும் இதில் உறுதியாயிருக்கிறது. அதாவது, அத்தகைய கன்னிகையின் காவலனாக, கடவுளால் நியமிக்கப்பட்ட அவரிடம் பாவத்தழலோ, அதன் விளைவான எவ்வகைப்பட்ட இச்சையுமோ இருந்ததில்லை.*

*இதனாலேயே ஆன்ம சரீரக் கற்பை அடைய ஆசிக்கிற அனைவரும்அர்ச். சூசையப்பருடைய மிகப் பெரிய சலுகையான இச்சை கலராத பரிசுத்த கன்னிமையின் நறுமணத்தில் ஒருசிறு பாகத்தையேனும் அவரிடம் கேட்டு மன்றாடுவார்களானால், அது அந்த ஆன்மாவை கன்னிமையுள்ள கற்பினால் விளங்கச் செய்யும் என்பது உறுதி.*

*எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு இக்காலத்தில் பரிசுத்த தனத்திற்கு எதிரான பாவங்களும், பாவ சந்தர்ப்பங்களும் பெருகிவிட்டன. இவற்றிலிருந்து நம்மைக்காப்பாற்ற மாதாவுக்கு அடுத்ததாக, அர்ச். சூசையப்பர் விசேஷ வல்லமை பெற்றருக்கிறார். அர்ச். சூசையப்பரிடம் மன்றாடி பரிசுத்தமாய் வாழ்ந்து நமது ஆன்மாவைக் காப்பாற்றிக் கொள்வோமாக !*

*- மரியாயே வாழ்க.!*

# ஜெபமாலை : தேவ அன்னைக்கு அர்ச்சிஷ்டவர்கள் சூட்டும் புகழ்மாலை !



ஜெபமாலை தேவதாய்க்கு மிகவும் பிடித்த ஜெபம். அவர்களை மகிழ்விக்கும் உந்நத ஜெபம் ! தேவ வரங்களையும், தேவ இரக்கத்தையும் நமக்குப் பெற்றுத்தரும். மகிமையான ஜெபம். ஆகையால் தான், அர்ச் சிஷ்டவர்களும், பாப்புமார்களும் தேவமாதாவின் ஜெபமாலை மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தார்கள். விசுவாசிகளையும் பக்தி கொள்ளச் செய்தார்கள்.

முத். 23-ம் அருளப்பர் பாப்பரசர் "ஜெபமாலையானது, அருட்சாதனங்களுக்குப் பிறகு, விசுவாசிகளின் கிறீஸ்தவ புண்ணியங்களின் பயிற்சியாக விளங்குகிறது. இது ஆன்மாக்களை கடவுளோடு ஒன்றிக்கச் செய்யும் ஒரு பக்தி முயற்சியாகும்." என்று கூறியவர், "நான் தினமும் மூன்று ஜெபமாலைகளைச் திவ்ய நற்கருணைக்கு முன்பாக ஜெபிப்பேன்" என்று தமது ஜெபமாலை ஜெபிக்கும் வழக்கத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

"தேவதாயை சங்கை செய்யும் ஜெபம் மாதாவுக்கு பிரியமான ஜெபம் என்று உரைக்கும் அர்ச். அல்போன்ஸ் லிகோரியார், ஜெபமாலையானது தேவ திரவிய அனுமானங்கள், திவ்யபலிபூசைக்கு அடுத்த மிகவும் வல்லமையுள்ள ஜெபம்" என்று போதிக்கின்றார். "ஜெபமாலையை சந்தேகிப்பது என்பது தன் சொந்த இரட்சண்யத்தையே சந்தேகிப்பது ஆகும்" என்று எச்சரிக்கிறார் இந்த திருச்சபையின் வேத அறிஞர்.

அர்ச். பிரான்சிஸ் சலேசியார் சுவிட்சர்லாந்து பகுதிகளில் பரவிய கால்விநிசியப் பதித்தை முறியடிக்கத் தமக்கு பெரீதும் உதவியது ஜெபமாலையே! என்கிறார். தினமும் ஒரு மணி நேரம் ஜெபமாலை ஜெபிப்பதில் ஈடுபடுவதாகத் தனக்குத் தானே நேர்ந்திருந்த அந்த அர்ச்சிஷ்டவர், "மிகவும் நன்றாக பக்தியோடு தேவ இரகசியங்களைச் சொல்லும் ஜெபமாலை மிக உன்னதமான ஜெபமுறையாகும்" என்றும், "எனது ஜெபமாலையைச் சொல்வது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான அலுவல். எனது இருதயத்தின் மிகவும் தூய மகிழ்ச்சி ஜெபமாலையே" என்று வியந்து கூறுகிறார்.

அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் "எனது ஜெபமாலையை ஒரு பாவியின் கழுத்தில் அணிவிக்க என்னை அனுமதித்தால், அவனால் என்னிடமிருந்து தப்பிக்க முடியாது. மனந்திரும்புவான். நாம் "மரியே" என்று கூறினால் மாதா "கடவுளே" என்கிறார்கள் என்று உரைக்கிறார். ஆஸ்திரியா நாட்டின் பாதுகாவலரான இரட்சகர் சபையைச் சேர்ந்த

அர்ச். கிளமென்ட் ஹோ ஃபாவோர் என்பவர் மக்கள் கூட்டம் மிகுந்த வியன்னா, நகர வீதிகளில் ஜெபமாலை சொல்லிக்கொண்டே செல்வார். "இறக்கும் பாவிகள் நன்மரணமடையும் வரத்தை ஜெபமாலை ஜெபத்தின் மூலமாகதாம் பெற்றுக் கொள்ள தவறுவதேயில்லை" என்று போற்றும் இந்தப் புனிதர் "கட்டளை ஜெபப்புத்தகம் மற்றும் ஜெபமாலையை எனது எல்லா உடைமைகளையும் விட மேலாக மதிக்கிறேன்" என்று கூறி எப்போதும் ஜெபமாலையை தமது இடையில் தொங்க விட்டிருப்பார்.

"அடிமைகளின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்படும் அர்ச். பீட்டர் கிளாவர், ஆப்பிரிக்க நீக்ரோ அடிமைகளுக்கு ஜெபமாலைகளை வழங்கி ஜெபமாலையின் தேவ இரகசியங்களை விளக்கிச் சொல்லி ஜெபிக்கத் தூண்டுவார். இதன் மூலமாக அந்த அடிமைகளுக்கு கிறீஸ்தவ வாழ்வையும், ஞானோபதேசத்தையும் கற்பித்து வந்தார். அவர்கள் அதனால் எளிதாக விசுவாசம் பெற்றனர்.

அர்ச். லூயிஸ் பெர்ட்டிராண்ட் என்பவர் தென் அமெரிக்க நாடுகளில் இந்தியர்களுக்கு ஜெபமாலையின் தேவ இரகசியங்களை போதித்தார். அவரது போதனைகள், அற்புதமாக காட்டுவாசிகளின் மொழியில் அவர்களுக்குப் புரிந்தது. ஒருமுறை இவர் ஜெபமாலையின் வல்லமையால் இறந்த சிறுமியை உயிர்ப்பித்தார்.

"குருமடங்களின் காவலர்" என்று திருச்சபையால் அறிவிக்கப்பட்ட அர்ச். சார்லஸ் பொரோமியோ "எனது மேற்றிராசனத்தின் புனிதத்தன்மைக்கு எனது ஜெபமாலையையே முதன்மையாக நம்பியுள்ளேன்" என்றுக் கூறுவார். "பங்குத் தந்தைகளின் பாதுகாவலரான" அர்ச். மரிய ஜான் வியான்னி பிரெஞ்சுப் புரட்சியின் போது பிரான்ஸ் நாட்டில் விசுவாசத்தைக் காத்தது ஜெபமாலையே என்று கூறிவந்தார்.

சேசு சபை வேதசாட்சிகளான ஐசாக் ஜோக்யூஸ் மற்றும் ரென்னே கூயில் என்பவர்கள் தங்கள் வேதசாட்சியத்தால் சிந்திய இரத்தத்தால் நியூயார்க் மண்ணை நனைப்பதற்கு முன்பாக முழந்தாலிட்டு ஜெபமாலையை பக்தியோடு ஜெபித்தார்கள்.

ஜெபமாலை ஜெபத்தில் வாய் செபமாக "பரலோக" மந்திரத்தையும், "அருள்நிறைந்த" மந்திரத்தையும் மீண்டும் மீண்டும் சொல்வதன் மூலம் ஒருவர் காட்சி தியானத்தையும், தேவ ஒன்றிப்பையும் அடைய முடியும் என்று தமது "உத்தமதனத்தின் பாதை" என்ற நூலில் அர்ச். அவிலா தெரசம்மாள் குறிப்பிட்டுள்ளாள்.

ஜெபமாலையை ஜெபிக்காத அர்ச்சிஷ்டவர்களே இல்லை என்று கூறலாம். புனிதர்களின் புனித வாழ்விற்கு ஜெபமாலையே பெரும் காரணமாக விளங்கியது.

எனவே தான் பாத்திமாவில் தோன்றிய தேவ தாயும், சிறுவர்களுக்கு தாம் காட்சியளித்த ஆறுதடவைகளிலும் "தினமும் ஜெபமாலை செபியுங்கள்" என்று அறிவுறுத்தினார்கள். ஜெபமாலையின் மீது பாத்திமா சிறுவர்கள் கொண்ட விசேஷப் பக்தியே தேவதாயிடம் தனிச்சலுகைப் பெறச் செய்தது ! எனவே, தேவதாயின் அன்பு மக்களான நாம் தினமும், ஜெபமாலை ஜெபிப்போம் ! நமதன்னையின் உள்ளத்தை, இதனால் மகிழ்வித்து, எண்ணற்ற தேவவரங்களையும் தேவ இரக்கத்தையும் அதனால் பெற்றுக் கொள்வோமாக!

**பரிசுத்த ஜெபமாலை மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் !**

*- மரியாயே வாழ்க!*

# அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் அதிசிரேஷ்டர், தமது நண்பர்களுக்கும் உபகாரிகளுக்கும் எழுதிய மடல் !



(இன்று, உலகமும், திருச்சபையும் எதிர்நோக்கி வரும் மிகக்கொடிய சமுதாய ஒழுக்கச்சீர்கேடு இயற்கைக்கு விரோதமான தன் பாலின உறவுமுறை பழக்கம் என்றால் மிகையாகாது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் கோபத்தை மூட்டி, சோதாம் கோமரா நகரங்களை அழிக்கக் காரணமான பாவம், இன்று உலகில் விஷத்தைப்போல உலக நாடுகளில் பரவி, அது கத்தோலிக்க மக்களையும் ஊடுருவி ஆன்ம அழிவிற்குக் கொண்டு செல்லும் அபாயத்தை சபையின் அதிபர் அவர்கள் தமது நண்பர்களுக்கும், உபகாரிகளுக்கும் சுட்டிக்காட்டி எச்சரிக்கும் இக்கடிதம் நமது வாசகர்களுக்கும் மிகவும் பயன்தரக் கூடியதாக இருக்கும் என்பதற்காகவே இந்த மடலை நாம் வெளியிடுகிறோம். சோதோம் புரட்சி என்று அதிபர் சுவாமி குறிப்பிடும் இந்த அபாயத்தின் தன்மை, அதிலிலிருந்து நம்மையும் நம் குழந்தைகளையும், காப்பாற்றிக் கொள்ளும் உபாயங்களையும் நேயர்கள் நன்கு அறிந்து கொள்ள தேவ உதவியை மன்றாடி கவனமாக படிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நம் முன்னே நிற்கும் இந்த கொடிய ஆபத்தினை உணர்ந்து அதிலிலிருந்து நம்மையே காப்பாற்றிக் கொள்ள முயல்வோமாக. நமதன்னை மகாபரிசுத்த கன்னிமாமரி இதில் நமக்குத் துணைபுரிவார்களாக! ஆர்.)

**அன்புமிக்க விசுவாசிகளே, நண்பர்களே உபகாரிகளே.**

உலகம் திடீரென மாற்றமடைந்து மற்றொரு உலகமாக விழித்தெழுவது போன்ற எதிர்பாராத உணர்வை பெறுவது வரலாற்றில் அடிக்கடி நிகழ்ந்துள்ளது. உதாரணமாக, திருச்சபையின் தொன்மை காலத்தில் அபாயகரமான ஆரிய பதிதத்தின்போது அர்ச். ஜெரோமின் வார்த்தைகளின்படி "உலகம் ஆரிய பதிதத்தில் திடுக்கிட்டு விழித்துக்கொண்டது". அதாவது திருச்சபையெங்கும் ஆரிய பதிதம் பரவி, வியாபித்து விட்டிருந்தது. அதேபோல, 16-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் மூன்றில் ஒருபகுதி புராட்டஸ்டாண்ட் பதிதத் தன்மையுள்ளதாக விழித்தெழுந்தது. அதாவது, புராட்டஸ்டாண்ட் பதிதம் பரவி விட்டிருந்தது. யதார்த்தத்தின்படி பார்த்தால், இந்த நிகழ்வுகள் திடீரென, ஒரே இரவில் நிகழ்ந்து விடவில்லை. மாறாக, இவை படிப்படியாக ஆயத்தம் செய்யப்பட்டவை. அக்காலக்கட்டங்களில் வாழ்ந்தவர்கள் இந்த பேரழிவுகளுக்கான ஆரம்ப, ஆயத்தநிலைகளின் கனாகனத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அவைகளின் பின்விளைவுகளை உணர்ந்து கொள்ளவில்லையாதலால் அவை நிகழும்போது திடுக்கிட்டுப் போனார்கள். அந்த மாற்றங்கள் நிலைகுலையச் செய்வனவாக இருந்தன. ஏனெனில், மக்களினங்கள் இந்த தீமைகளால்

பாதிக்கப்பட்டு ஆரிய பதிதர்களாகவோ, அல்லது புராட்டஸ்டாண்ட் மனப்பான்மை யுள்ளவர்களாகவோ மாறிப் போயிருந்தனர். இதனை அவர்கள் புரிந்து கொண்டபோது, தலைக்கு மேலே வெள்ளம் பாய்வது போல, ஏற்கெனவே எல்லாம் கெட்டு, காலதாமதமாகி விட்டிருந்தது!

துர்பாக்கியமாக, நாமும் இப்போது அதே போன்ற ஒரு சூழ்நிலையில் தான் இருக்கிறோம். நம்மைச் சுற்றிலும், நமக்கு அதிர்ச்சியளிக்கும் காரியங்களையும், விமர்சனங்களையும், முயற்சிகளையும் காண்கிறோம். ஆயினும், அவற்றை முழுமையாக புரிந்து கொள்வதில் அலட்சியமாக, கண்டுகொள்ளாமல் இருக்கும் ஆபத்துக்குள் நாம் அகப்பட்டிருக்கிறோம். எப்படியெனில், இத்தகைய மாற்றங்களும், மாறுபாடான அம்சங்களும் மற்றவர்களைப் பாதிக்கும் காரியங்களாகத் தான் உணப்படுகின்றன. ஆனால், நம்மையோ, நம்மைச் சார்ந்தவர்களையோ இவை ஒருபோதும் பாதிப்பதில்லை என்பதாகவே அவற்றை நாம் கவனத்தில் கொள்கிறோம். அவற்றை நாம் வெறுக்கிறோம். ஆயினும் ஏதோ ஒரு விதத்தில் அவற்றை நமது அன்றாட வாழ்வில் அலட்சியம் செய்கிறோம். நிதர்சனமான இந்த மாற்றங்களோ, பிரச்சனைகளோ நம் மீதும், நம் குழந்தைகள் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தையோ, அவற்றால் உண்டாகவிருக்கிற ஆபத்துக்களையோ நாம் புரிந்து கொள்வதில்லை.

உலகம் இன்று ஒரு உலகளாவிய "சோதோம் கொமோராவாக" (காண்க. ஆதியாகமம் 18 & 19 அதிகாரங்கள்). ஆகிக்கொண்டிருக்கிறது என்பதை தெளிவாகச் சொல்லப்படவேண்டும். (இயற்கைக்கு மாறாக தன்பால் உறவு பழக்கங்கள் - Homo sexual habits - பாவங்கள். ஆ.ர்.). இடம் விட்டு இடம் மாறி வேறு எங்காவது செல்வதன் மூலம் இதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் இந்த கொடிய தீய மாற்றம் உலகளாவியதாக இருக்கிறது. என்னதான் செய்வது ? ! நாம் அமைதியாக இருந்து கொள்ள வேண்டும். ஆயினும், விழித்தெழும்போது, (ஆபத்துக்களை உணர்ந்து கொள்ளும்போது.ஆர்.) நாம் திகைப்படையாமல், நமக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவழிமுறைகளையும் பயன்படுத்தி, நம்மையும், நம்மைச் சார்ந்ததோரையும் காத்துக் கொள்ள, நம்மையே ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**உலகளாவிய சோதோம் மற்றும் கொமோரா**

தீமைகளையும், அழிவுகளையும் முன்னுரைக்கும் ஒரு தீர்க்கதரிசியாகத் தோன்றுவது எப்போதுமே கடினமானது. ஆயினும், சில சமயங்களில் அதைத் தவிர்ப்பது சாத்தியமேயில்லை. உலகத்தில் ஒவ்வொரு நாளும், ஒரு பேய்த்தனமுள்ள கலாச்சாரம் தோன்றி வேரூன்றிக் கொண்டிருக்கிறது. விசுவாச மறுதலிப்பு மற்றும் நாத்தீகத்தின் வழியாகக் கடவுளை மாறுதலித்த பின், நவீன சமகால மனுக்குலம் தவிர்க்க முடியாத விதத்தில் அவருடைய இடத்தில் வேறொன்றை ஸ்தாபிக்க விரும்புகிறது. இதன் விளைவுகள் சாத்தானுக்குரிய தன்மையுள்ளவையாக இருக்கின்றன. எது நன்மை, எது தீமை என்று தீர்மானிக்கும் உரிமைக்கு இன்று மனிதன் சொந்தம் கொண்டாடுகிறான். வாழ்வது அல்லது சாவது, இப்படி இருப்பது அல்லது அப்படி இருப்பது, உயிரைக் கொடுப்பது அல்லது அதனை அழிப்பது இவற்றில் ஒன்றைத் தீர்மானிக்கும் உரிமை தனக்குத்தான் உண்டு என்று அவன் வலியுறுத்துகிறான். சுருங்கச் கூறுவதானால், கடவுளே தீர்மானிக்க உரிமையுள்ளவராக இருந்த எல்லாக் காரியங்களையும் அதுவும் உலகளாவிய முறையில் தானே தீர்மானிக்க மனிதன் விரும்புகிறான்.

ஆனால், இவை அனைத்திலும் மிகவும் மோசமானது, இந்த அருவருப்புக்குரிய கொள்கைகளை மாசற்றவர்களாகிய குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த அவன் விரும்புவதுதான். குழந்தைகளையும், இளம்பருவத்தினரையும், இளம் வயதிலேயே யதார்த்தத்தின் இந்தப் புதிய கண்ணோட்டத்திற்கு உட்படுத்தி அவர்களைக் கெடுத்து, பெரியவர்கள் மட்டுமே அறிந்து கொள்ள வேண்டியவையும், இன்னும் மனிதத்தன்மையுள்ளதும், ஆரோக்கியமானதுமான ஒரு சமூகத்தில் பெரியவர்களும் கூட அறியாதிருக்க வேண்டியதுமான காரியங்களை அவர்களுக்குக் கற்பிக்கும் நோக்கத்துடன், அவர்கள் மீது விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. ஒழுக்கரீதிப்படி பேசுவதானால் மாசற்றத்தனம் இயற்கையாக எங்கே இருக்க வேண்டுமோ, அங்கேயே அதை அழிக்க வேண்டுமான ஒரு உண்மையான (கொடூர) விருப்பம் காணப்படுகிறது. நாம் இத்தகைய நிலையில் தான் இருக்கிறோம். இப்போதுள்ள பிரச்சனை உலகத்தை முற்றுகையிட்டு, தனது பாதையில் உள்ள அனைத்தையும் கெட்டுப்போகச் செய்கிற பாவம் மட்டுமல்ல, மாறாக, இவையெல்லாம் அங்கீகரிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகிறது என்பதுதான். (சமீபத்தில், க்யூபா நாட்டில் ஒரே பாலின திருமணம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆ.ர்.) மனிதனால் கைவிடப்பட்டிருக்கிற சர்வேசுரன், தமது பங்கிற்கு மனிதனை அவனுடைய பரிதாபத்துக்குரிய கதியில் அவனைக் கைவிடுகிறார் என்பதற்கான அடையாளமாக இது இருக்கிறது !

## கடவுளின் இந்தக் கைவிடுதலின் விளைவுகள் :

இந்த புதிய சோதோம்மில் (கற்புக்கு எதிரான பாவம் மற்றும் தன்பால் உறவு பாவம் நிறைந்த சமுதாயத்தில் ஆ.ர்.) விசுவாசமும், தேவசினேகமும் பொய்களுக்கும், சுயநலத்திற்கும் வழிவிட்டு ஒதுங்கி மறைந்து போய்விட்டன.

அர்ச். சின்னப்பர் தெள்ளத்தெளிவான வார்த்தைகளில் அவிசுவாசத்தின் கடைசி விளைவுகளைப் பற்றி விவரமாக விளக்கியிருக்கிறார் : "அவர்கள் சர்வேசுரனை அறிந்திருந்தும், அவரைத் தேவனாக ஸ்துதிப்பதில்லை; அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினதுமில்லை. ஆனால், அவர்கள் வீண் சிந்தனைகளில் உழன்று அலைந்து மதிகெட்ட அவர்களுடைய இருதயம் இருண்டுபோனது. இதினிமித்தம் அவர்கள் தங்கள் சரீரங்களைத் தங்களுக்குள்ளேதானே இழிவாக்கும் படியாக சர்வேசுரன் அவர்களைத் தங்கள் இருதயங்களின் இச்சைகளாகிய அசுசிக்குக் கையளித்தார். ஏனெனில் அவர்கள் சர்வேசுரனுடைய சத்தியத்தைப் பொய்ரூபங்களாக மாற்றி, சிருஷ்டிகரை விட்டு, சிருஷ்டிப்புக்களே தாவிளையென்று அவைகளைத் தொழுது சேவித்தார்கள். . . ஆகையால் சர்வேசுரன் அவர்களை இழிவான துரிச்சைகளுக்குக் கையளித்தார். . . அவர்கள் சர்வேசுரனுடைய அறிவைக் கைக்கொள்ள மனதில்லாதிருந்ததினாலே, சர்வேசுரன் அவர்களைக் கேட்டுக்குரிய புத்திக்குக் கையளிக்கவே, அவர்கள் அடாத காரியங்களைச் செய்யும்படியாயிற்று. அவர்கள் எவ்வித அக்கிரமதுர்க்குணத்திலும், காமம், லோபம், துஷ்டத்தனத்திலும் மூழ்கினவர்களாய், பொறாமை, கொலை, சண்டை, வஞ்சனை, தீங்குணம் நிறைந்தவர்களாய், காதுக்குள் தூற்றுகிறவர்களாய், புறணி சொல்பவர்களாய் தெய்வத்துக்கு வெறுப்பானவர்களாய், இடும்புக்காரராய், அகங்காரிகளாய், அகந்தையுள்ளவர்களாய், தீங்கு உண்டுபண்ணுகிறவர்களாய், பெற்றோருக்கு அடங்காதவர்களாய், மதியீனராய், அவையடக்க மற்றவர்களாய், பற்றுதலற்றவர்களாய் பிரமாணிக்கம் தவறுகிறவர்களாய், இரக்க மற்றவர்களாய் போனார்கள்.

அவர்கள் சர்வேசுரனுடைய நீதியை அறிந்திருந்தும், இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களும், இவைகளைச் செய்கிறவர்களுக்கு இணங்குகிறவர்களுமாய், சாவுக்குப் பாத்திரமாய் இருக்கிறார்களென்று கண்டுபிடியாமற் போனார்கள்" (உரோ 1 : 21, 24-26 ; 29-32)

### திருச்சபையின் அதிகாரிகளின் பலவீனம்

இது போன்ற ஒரு சூழ்நிலையில் 2-ம் வத். சங்கத்திலிருந்து எழுந்த (சங்க) சபை ஒரு முட்டுக்கட்டையான நிலையில், தான் இருப்பதாகக் காண்கிறது. சத்தியம் போதிக்கப்படுவதற்குப் பதிலாக, அதன் இடத்தை உரையாடல் (பிற மதங்களுடனான உரையாடல்) பிடித்துக் கொண்ட நாளிலிலிருந்து இது தவிர்க்கப்பட முடியாததாகி விட்டது; உலகத்தோடு ஒத்துப் போகவும், அதன் இயல்புக்கு மாறான நடத்தைகளைக் கண்டனம் செய்யாமலும் எந்த விதத்திலும் மேற்கொண்டு குழப்பம் விளைவிக்காமலும், அது இருக்கிறபடியே அதை ஏற்றுக் கொள்வதுமான திருச்சபையின் செயல், இறுதியாகத் தன் தீயக்கனிகளைத் தந்து கொண்டிருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட அருவருப்புக்களை ஏற்றுக் கொள்வதை ஏற்கனவே திருச்சபையின் கணிசமான பாகங்கள் (Portions) வெளிப்படையாகவே ஆதரிக்கின்றன. திருச்சபையின் மற்றப்பகுதிகள் அவற்றை எவ்வாறு எதிர்ப்பது என்பது பற்றி அறியாதவையாகக் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால், ஒரு புதிய சோதோம் கொமோராவுக்கான (பாவங்கள் மலிந்த ஒரு சமூதாயம்) அனைத்தும் தயாராக இருக்கிறது.

### பொருத்தமான தீர்வுகளுக்கான தேவை

சாத்தியமான எந்த ஒரு தீர்வுக்கும் முதல் நிபந்தனை, நாம் நமது கண்களைத் திறந்து, இந்த புதிய வாழ்க்கைமுறை நம் அனைவரையும் பாதிக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதாகும். ஆதிக்கம் செலுத்தக் கூடிய கலாச்சாரத்தில் இருப்பதாகிய அது, அதன் காரணமாக மொழி, பாணிகள், கலை, காட்சிகள், தெருக்கள் என்று எல்லா இடங்களிலும் இருக்கிறது. நாம் தொடர்ந்து பெற்று வரும் செய்திகளில் அது இருக்கிறது. ஏனெனில், அது நம் காலத்தின் முப்பரிமாணக் கண்ணாடியாக இருக்கிறது. அதன் வழியாக அனைத்தும் வடிக்கப்பட்டு, தரப்படுகின்றன. நாம் இதை இன்னும் அதிகமாக அறிந்திருக்க வேண்டும். நம் சுவாசிக்கும் காற்று விஷமாகிவிட்டது. எதனோடு அதிகமதிகமாக வாழவும், எதனால் விழுங்கப்படவும் நாம் வற்புறுத்தப்படுகிறோமோ அந்த வலைத்தளம் விஷமாக்கப்பட்டு விட்டது. அது உலகின் மிகத் தொலைவான மூலை முடுக்குகளுக்கெல்லாம் தன்னுடைய (பாவ) நோய்த்தொற்றை சுமந்து செல்கிறது. இதெல்லாமே நம்மை, தவறாமல் பாதிக்கின்றன. நம் சொந்த குடும்பங்களில் தொடங்கி, நம்முடைய குழந்தைகளும், இளம் பருவத்தினருமே இந்தப் பயங்கரமுள்ள விஷத்தால் மிக எளிதாகத் தாக்கப்படுகிறார்கள்.

### கிறீஸ்தவ வீரத்துவம் : அதன் இரு அடிப்படையான குணங்கள்

ஆனால், நாம் நம் கண்களைத் திறந்த பிறகு (-நம்முன்னே நிற்கும் தீமைகளைக் கண்டுபிடித்த பிறகு) என்ன செய்ய வேண்டும்? முன் எப்போதுமிராத அளவில், கடவுள் இந்த உலகளாவிய தீமையை, இந்தப் புதிய அஞ்ஞானப் பேரரசை அனுமதிக்கிறார் என்றால், உலகம் முழுவதிலும் கிறீஸ்தவ வீரத்துவத்தைத் (அஞ்சாமல் எதிர்த்து ஜெயிக்கும் திடம்) தூண்டி எழுப்பும்

நோக்கத்தோடே தான் என்பது உறுதி. இந்த தீமையின் பேரரசுக்கு வெளியே நாம் வாழ முடியாது. ஆயினும், அதனால் நசுக்கப்படாமல், அதில் வாழ நம்மால் முடியும். நாம் நம்மையே வேறுபடுத்திக் கொள்ளும் அளவுக்கு, அதாவது, நாம் தனித்து நிற்கும் அளவுக்கு அதன் ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்து, அதிலேயே வாழ நம்மால் முடியும். அதிககாலங்களில் அஞ்ஞானப் பேரரசுகளில் கிறீஸ்தவர்கள் ஏற்கெனவே செயல்படுத்திக் காட்டிய இந்த கிறீஸ்தவ வீரத்துவம் இரண்டு குணாதிசயங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது, இது (வீரத்துவம்) மறைவிலே துவங்கி, உள்ளரங்கத்திலே போஷிக்கப்பட்டு, வளர்கிறது. இது வளர்வதற்குக் காலம் எடுத்துக் கொள்ளும். தேவ சினேகத்திலும், பாவத்தின் மீதான வெறுப்பிலும் வளர்வதற்கு ஜெபம் அவசியம். இதனை ஒரே நாளில் அடைந்து விட முடியாது. இந்த வீரத்துவத்தின் வெளிப்பாடானது, மாபெரும் வெளிச்செயல்கள் ஆண்டுகனக்கில் மறைவானதும், நிலையான, விட்டுக் கொடுக்காத தன்மையின் விளைவாகவே இருக்கிறது. நமதாண்டவரின் சிலுவைப் பாடுகளின் வீரத்துவம் பெத்லேகம் முன்னிட்டியிலும், அவரது நாசரேத் இல்லத்தின் மறைந்த வாழ்விலும் முன் கூட்டியே வெளிப்படுத்தப்பட்டது.

அன்றாட வாழ்வில், சாதாரண நடத்தைகளில் ஒவ்வொரு நாளும், தங்களை தீமைகளிலிருந்து விலக்கியும், வீர வைராக்கியத்தோடு பாவத்திலிருந்து தங்களையே காத்துக்கொள்ள வல்லவர்களுக்கே, இருதயங்களையும், பாவத்திலிருந்து விலக மேற்கொள்ள அவர்களின் முயற்சிகளையும் பரிசோதனை செய்பவரான கடவுளால் மட்டுமே அறிந்து, சன்மானம் அளிக்கப்படுபவர்களுக்கு மட்டுமே இறுதிநிலை வரம் - கடைசி வரை உறுதியாக இருக்கும் வரம் தந்தருளப்படுகிறது. பரிசுத்தமான இருதயமோ ஒரு உண்மையான உள்ளரங்கமான மனந்திரும்புதலோ இல்லாத வெறும் வெளியரங்க அடையாளங்களும், செயல்களும், ஒரு மாயத்தோற்றத்தின் ஆபத்தாலும் வெளிவேடத்தின் ஆபத்திலுமே நம்மைக் கொண்டு சென்றுவிடும். அபாயத்தைக் கொண்டுள்ளது. ஆபிரகாம் சர்வேசுரனில் நன்கு ஊன்றியிருந்த ஒரு பரிசுத்தமான இருதயத்தைக் கொண்டிருந்தார். அது சோதோம் அடையாளப்படுத்திய அனைத்திலிருந்தும் விலகியிருக்கச் செய்தது. ஆனால், லோத், தாமே நீதிமானாக இருந்தும் (2 இரா 2 : 7-8) சோதோமிலேயே (நகரிலேயே) தங்கிருப்பதை தேர்ந்து கொண்டார். இந்தச் சமூகச் சூழ்நிலை மற்ற எல்லாவற்றையும் மீறி அவருக்குப் பிரியமானதாக இருந்தது. அதன் மோசமான பாதிப்புகளிலிருந்து துர்ப்பாக்கியமான விதத்தில் அவருடைய மக்கள் தப்பித்துக் கொள்ளவில்லை.

பல ஆண்டுகளாகத் தன்னை வெளிப்படுத்தவும் வேண்டியதாக இருக்கும் இந்த வீரவைராக்கியத்தின் இரண்டாவது அம்சம் கடவுளுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பது ஆகும். இது அன்பின் தெள்ளத்தெளிவான அடையாளமாக தாம் நேசிக்கிற அனைத்தையும், தாம் நேசிக்கும் விதத்தில் நாமும் நேசிக்கவும், தாம் வெறுக்கும் அனைத்தையும், தாம் வெறுக்கும் விதத்தில் நாமும் வெறுக்கவும் செய்பவரான கடவுளின் மீதான விசுவாச அறிக்கை பலனுள்ளதாக இருக்கவேண்டுமானால், அது ஒரு உண்மையான தாராளமனதோடு நம்மையே, அவருக்கு அர்ப்பணித்து விடுதலோடு சேர்ந்திருக்க வேண்டும். இத்தகைய நேசம் இல்லாமல், (பாவத்தின் மீதான) இந்த வெறுப்பையும் நாம் கொண்டிருக்க முடியாது. இத்தகைய வெறுப்பை கொண்டிருக்காவிட்டால் மேலும், மேலும் மறைவானதாகவும், அழமானதாகவும்,

பொதுவானதாகவும் மாறிவரும் கற்புக்கு விரோதமான ஒரு பாவசோதனையை, - லோத்தின் மொத்த குடும்பம் முழுவதுமாய் தப்பிவிட முடியாதிருந்த அந்த பாவச் சோதனையை நாம் எதிர்ந்து நிற்கவும் முடியாமல் போகும்.

## Credidimus Caritati : மூன்று சலுகை பெற்ற ஆயுதங்கள்

இந்தப்புதிய சோதோமால் விழுங்கப்பட்டவர்களாக, நாம் கண்விழிப்பதற்கு முன்பாக இப்போதே, நாம் நம் கண்களைத் திறப்போமாக. நம் குழந்தைகளின் கண்களைத் திறப்போமாக. முதலில், நம் முன்மாதிரிகையான நடத்தையாலும், நம் அன்பாலும், (பாவத்தின் மீதான) நமது வெறுப்பையும் கொண்டு, நம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்போமாக. எந்தவிதமான சமரசமுமின்றி, ஒரு சாந்தமும், ஆரோக்கியமானதுமான உறுதியோடு உலக உணர்வுகளைப் பரப்புவதில் உதவக்கூடிய அனைத்தையும் நமது இல்லங்களிலிருந்து அகற்றுவோமாக. இதில் நாம் மூடத்தனமுள்ளவர்களாவும், பலவீனமுள்ளவர்களாகவும் இராதிருப்போமாக. எந்தக் குடும்பமும், எந்த மனிதனும் தான் பாதுகாப்பாக இருப்பதாக நம்பலாகாது. பாவச்சீர்கேடு ஏற்கனவே, நாம் நினைப்பதை விட மிக ஆழமாக வேரூன்றி விட்டது. அதன் வளர்ச்சி நிறுத்தப்பட இயலாதாதாக இருக்கிறது.

அதே சமயத்தில், இந்த போர், அடிப்படையிலே சுபாவத்துக்கு மேற்ப்பட்டது என்பதை நாம் மறவாதிருப்போமாக. சாத்தானின் வஞ்சகத் தந்திரங்களை முற்றிலும், சாதாரணமாக - சுபாவமான வழிமுறைகளைக் கொண்டு நாம் வென்று விடமுடியாது. மூன்று முக்கியமான சுபாவத்திற்கு மேலான வழிமுறைகள் இருக்கின்றன. நாம் அவைகளை தொடர்ந்து மீண்டும் பயன்படுத்த முயல வேண்டும்.

**முதல் வழிமுறை - திவ்ய பலிபூசையாகும் :** இதன் வழியாகவே நமதாண்டவர் தொடர்ந்து பசாசையும், பாவத்தையும் வெற்றி கொண்டு வருகிறார். இந்த வழிமுறையை அதன் முழுமதிப்பில் நாம் ஒருபோதும், மதித்துப் போற்றி விட முடியாது. அதை நாம் எவ்வளவு அதிகமாக வேண்டுமானாலும் சார்ந்திருக்க முடியும். நமது பலிபீடங்களில் ஒப்புக் கொடுக்கப்படுகிற விலைமதிக்கப்படாத திரு இரத்தம் தான் காலங்களில் முடிவு வரையிலும், புதிய சோதோமுக்கு மத்தியிலும் கூட, மாசற்றத்தனத்தையும் கன்னிமையையும் பிறப்பிக்கும் வல்லமையைக் காப்பாற்றுவதாக இருக்கிறது. திவ்ய பலிபூசை ஆன்மாக்களின் மீதான நமதாண்டவரின் நேசத்தின் அதியற்புதப் படைப்பாக இருக்கிறது. அது சுய அர்ப்பணிப்பின் நிலை வரைக்கும் அவர்களைப் பலப்படுத்தும் அதே அன்பை அவர்களில் போஷித்து வளர்க்கிறது.

**இரண்டாவது வழிமுறை :** பரிசுத்த ஜெபமாலையாகும். இந்த மிகவும் பரவலான, மிகச் சாதாரண வழிமுறை நமது குடும்பங்களில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். ஜெபமாலை ஜெபிப்பதில், நமதாண்டவருடையவும், நமது ஆண்டவளுடையவும் வாழ்வின் மாபெரும் பரம இரகசியங்களுக்குள் இன்னும் ஆழமாக மூழ்கிப் போவதற்கான வழியை நாம் காண வேண்டும். நமது திருமாதாவால் வழிநடத்தப்படும் இதன் வழியாக சேசுவும், மாதாவும் கடவுளுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்ததிலும், அவர்களுடைய பரித்தியாக உணர்விலும், அவர்களுடைய மாசற்றத்தனத்திலும், பரிசுத்தனத்திலும், அவர்களைக் கண்டுபாவிக்கக் கூடியவர்களாக நாம் ஆவோம். பரிதாபத்துக்குரிய வகையில், சில சமயங்களில் நாம் கூடி, சேர்ந்து ஜெபிக்க போதிய நேரம் கிடைப்பதில்லை.

எல்லாவற்றிக்கும் மேலாக, ஜெபமாலை ஜெபிப்பது குடும்பத்தின் அன்றாடச் செயல்படாக இருக்கவேண்டும். அதைச் சுற்றித்தான் நாம் நமது அன்றாட நாளை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். இந்த ஒழுங்கு எந்த குடும்பங்களில் இருக்கிறதோ, அந்த குடும்பங்களில் குழந்தைகளின் இறுதிவரை நிலைத்திருத்தலின் வரப்பிரசாதம் தவறிப்போகாது.

**மூன்றாவது வழி :** நிச்சயமாக நிலைமை வரத்தைப் பெறுவதற்கு தற்போதைய சூழ்நிலையில், மிகவும் தனித்துவமாக விளங்குகிறது. **அது மரியாயின் மாசற்ற இருதயமாகும்.** நமதாண்டவர் தமது தேவ பராமரிப்பில், இந்த கொடிய சோதோம் கொமோரா சூழ்நிலைக்கு மத்தியில் நமக்கு ஒரு அடைக்கல ஸ்தலத்தைத் தர விரும்பினார். இந்தத் தஞ்ச ஸ்தலத்தினுள் நாம் பிரவேசிக்க வேண்டும். அதாவது, நாம் நமது இருதயத்திற்கும், கன்னிமாமரியின் மாசற்ற இருதயத்திற்குமிடையே எத்தகைய நெருக்கமான அன்னியோன்னியமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால், நாம் இந்த திவ்ய கன்னிகையின் உள்ளரங்க வாழ்வை அறிந்து போற்றக் கூடியவர்களாகவும், அவர்களுடைய விருப்பங்களையும், அவர்களுடைய சந்தோஷங்களையும், அவர்களுடைய துயரங்களையும், அவர்களுடைய கவலைகளையும் பகிர்ந்து கொள்பவர்களாகவும் ஆக வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, இரட்சண்ய அலுவலில் எந்தவிதமான ஒதுக்கீடும் இல்லாமல் ஒத்துழைக்க அவர்கள் கொண்டிருந்த ஆவலையும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இதை நாம் செய்வோமென்றால், வேறு எங்கும் நாம் கண்டடைய முடியாததையெல்லாம் இந்த மாசற்ற இருதயத்தில் நாம் கண்டு பிடிப்போம். அனைத்திற்கும் மேலாக, வெல்லப்பட முடியாத ஆன்மாக்களை மனந்திருப்புகிற, தயாளமான சிநேகத்தை அந்த இருதயத்தில் கண்டடைவோம். அதாவது எங்கே வெற்றியின் இரகசியம் மறைந்திருக்கிறதோ, அங்கே தான் அது கண்டுபிடிக்கப்படும். ஒரு ஆத்துமம் உண்மையாகவே நேசிக்கும் போது, அது எந்த துன்பச் சோதனையையும் எதிர்கொள்ள தயாராகிறது. நியாயமானவையும், புரிந்து கொள்ளப்படக் கூடியவையுமான எல்லா அச்சங்களும் அங்கே மறைகின்றன. எல்லா பலவீனங்களும் மறைகின்றன. வீரத்துவம் அங்கே சாத்தியமாகிறது. உண்மையாகவே மேலே குறிப்பிட்ட எல்லா கருத்துக்களும் முழுமையான அன்பினால் சாத்தியமாகின்றன. உண்மையான சிநேகம், கடவுள் நமது இருதயங்களில் பொழிகின்ற அன்பு எப்போதுமே வெற்றி பெறுகிறது. அன்பு அரசாளும் போது அது அடக்கியாள்கிறது. நாம் இங்கே எதைப்பற்றி பேசுகிறோமோ, அந்த நேசம் பலவீனமாக இல்லை, மாறாக, பலமாக இருக்கிறது. இதுவே யாராலும் எதிர்த்து நிற்க முடியாத ஆயுதமாக இருக்கிறது. வேதசாட்சியத்திற்குத் தயாராக இருக்கிற ஆன்மாக்களின் நேசம் மட்டுமே சுயநேசம், மற்றும் அசுத்தத்தின் ஆட்சியின் மீது வெற்றி கொள்ள முடியும். உலகத்தில் இப்போது இல்லாததும், ஆனால் நம்முடையதாக இருக்க வேண்டியதுமான இந்த அன்பின் முன்மாதிரிகையையும், ஆதாரத்தையும், கன்னிமரியாயின் மாசற்ற இருதயத்தில் தான் நாம் கண்டடைய முடியும்.

**Credidimus Caritati. சர்வேசுரன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக !**

*சுவாமி தாவீதே பாக்ஸியாரானி அதிசிரேஷ்டர்*

மென்சிங்கன்,

3, செப்டம்பர் 2022

அர்ச். பத்தாம் பத்திநாதர் திருநாள்

- மரியாயே வாழ்க.!

# அணுகுண்டு வெடிப்பில் உயிர்காத்த ஜெபமாலை !

இரண்டாவது உலக யுத்தத்தின் உச்சக்கட்டமாக, 1945 ஆகஸ்ட் 6ம் தேதி காலை 8.15 மணிக்கு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகரில் அணுகுண்டு வீசப்பட்டது. ஒரே கணத்தில், அந்த நகரே சுடுகாடு ஆனது ! ஆம் ! அந்த நகரில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் செத்துப் போனார்கள். 99 சதவீத கட்டிடங்கள் இடிந்து போனதால் மண்ணோடு மண்ணாக புதைந்து போனார்கள்.

ஆனால், குண்டுவீசப்பட்ட மையப்பகுதிலிருந்து 1200 மீட்டர் தூரத்திலிருந்த அர்ச். மோட்ச ஆரோபண மாதா ஆலய பங்குக்குருவின் இல்லத்தில் வாழ்ந்த 4 சேசுசபைக் குருக்கள் மட்டுமே உயிர் தப்பினர். ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த சேசு சபை வேதபோதகக் குருக்களான சங். க்ளெய்ன்சோர்க், சங்.ஹியூபர்ட் ஸ்கீஃபர், சங்.லாசால் மற்றும் சங்.ஹியூபர்ட் சீஸ்லிக் ஆகியோரே அவர்கள் !

அவர்கள் எப்படிக் காப்பாற்றப்பட்டார்கள்? உயிர் தப்பிய ஹியூபர்ட் ஸ்கீஃபர் சுவாமி **"எங்களுடைய இல்லத்தில் ஜெபமாலை தினமும் ஜெபிக்கப்பட்டது. நாங்கள் பாத்திமா செய்தியின்படி வாழ்ந்து வந்தோம். அதாவது, பரிகாரப் பக்தியை அனுசரித்து வந்தோம். உலகெங்கும் எண்ணற்ற பேர்கள் சமாதானத்துக்காக ஜெபமாலை ஜெபித்து ஒப்புக் கொடுக்கும் போது, அது சமாதானத்தைப் பெற்றுத்தரும் வல்லமையுள்ள சக்தியாக மாறுகிறது."** என்று தாம் எழுதிய ஹிரோஷிமாவின் ஜெபமாலை என்ற சிறு நூலில் குறிப்பிட்டுள்ளார். நீண்ட நாட்கள் ஜெபமாலைப்பக்தியைப் பரப்பி வந்த இக்குரு 1982 மார்ச் 27-ம் நாள் மரணமடைந்தார்.

இங்கே, 1979-ல் பாத்திமா காட்சி பெற்ற சகோதரி லூசியா குறிப்பிட்ட, **"மாதா தமது அன்புக் குரியவர்களை எப்போதும் காப்பாற்றுவார்கள்"** என்ற வாக்கை நினைவு கூறுவது நன்று !

- *ஆதாரம் :* Soul Magazine *ஜீலை - ஆகஸ்ட் 1996 &* Fatima Findings *மே இதழ்*

---

# தினமும் 30 ஜெபமாலைகள் !

**ஒருசமயம், அர்ச். பியோ சுவாமி தினமும் எத்தனை ஜெபமாலைகளை ஜெபிக்கிறார் என்று மடத்தின் சக துறவி அவரிடம் கேட்டார். அதற்கு உடனே "30 ஜெபமாலைகள், கொஞ்சம் அதிகமாக இருக்குமே தவிர குறையாது" என்று பதிலளித்தார்.**

**அதனால் வியந்து போன துறவி "உங்களால் எப்படி இத்தனை ஜெபமாலைகள் ஜெபிக்கமுடிகிறது" என்று கேட்க, "இரவு நேரம் இருக்கிறதல்லவா?" என்று பியோ சுவாமி பதிலளித்தார்.**

✝

# நினைவு அஞ்சலி

**"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்"** (எசா 62 : 3)



தோற்றம்
20.12.1995

மறைவு
06.07.2022

## ரெத்னா ஆண்ட்ரூ

**(VAO - கிராம நிர்வாக அலுவலர்)**

**இறைவா ! இவர் ஆன்மாவின் மீது இரக்கம் வைத்து,
முடிவில்லா பேரின்ப வாழ்வளித்து புனிதர்களின்
தோழமையில் சேர்ப்பீராக.**

பிரிவால் வருந்தும்,
தந்தை : **பீட்டர்** தாய் : **பபியோலா**
மற்றும் உறவினர்கள்.
வேங்கிட குளம், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா
தஞ்சாவூர் மறைமாவட்டம்.


## எனது ஆயுதத்தைத் தாருங்கள் !

அர்ச். பியோ சுவாமி இரவு நேரங்களிலும் ஜெபமாலையை தமது கரத்தில் வைத்திருப்பார். அவர் மரிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக, படுக்கையில் படுத்தநிலையில் தமது அருகே உதவிக்காக நின்றியிருந்த துறவியிடம், "சகோதரரே ! எனது ஆயுதத்தைத் தாருங்கள்" என்று கேட்டார். ஆச்சர்யமடைந்த துறவி "சாமி உங்கள் ஆயுதம் எங்கே இருக்கிறது? என்னால் காணமுடியவில்லையே?!" என்று குழம்பியவராய் கேட்டார்.

அதற்கு அர்ச். பியோ, "அது, எனது அங்கியில் இருக்கிறது. அதோ அங்கே !" என்று கண்களால் சுவரில் மாட்டப்பட்டிருந்த அங்கியினைச் சுட்டிக்காட்டினார். அதன்படி அங்கியினை ஆராய்ந்து, பாக்கெட்டைத் துலாவியவர் "வேறு ஆயுதம் இல்லை. உங்கள் ஜெபமாலை மட்டுமே உள்ளது" என்று தயக்கத்தோடு பதிலளித்தார் துறவி.

உடனே அர்ச். பியோ சுவாமி, "ஏன்? அது ஒரு ஆயுதமில்லையா? . . . அது தான் உண்மையான ஆயுதம்" என்று கூறினார்.

# தூக்குமர நிழலிலே!


THE GALLOWS ON WHICH THEY WERE EXECUTED.
The tall ladder should not appear, it being in use by workmen.
Photographed by B. R. Lyons on Monday.


(இங்கிலாந்து நாட்டில் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது கத்தோலிக்க விசுவாசத்துக்காக வேதசாட்சியமடைந்தவர்களின் வரலாறுகள். ஆ.ர்)

## 1. அர்ச். ஜாண் ஃபிஷர்

(St. John Fisher)

(1469 - 1535)

### சிறை பிடிக்கப்பட்ட மேற்றிராணியார்!



அரசனின் விவாகரத்து முயற்சியை எதிர்த்த மேற்றிராணியார் ஃபிஷர், மன்னனின் விரோதத்திற்கு ஆளானார். ஒரு முறை அவரது இல்லத்திற்கு வழங்கப்பட்ட உணவில் விஷம் கலக்கப்பட்டது. அதில் அவரது இல்ல ஊழியர்கள் இருவர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆனாலும் சர்வேசுரனின் போதனைக்கு விரோதமான அரசனின் செய்கைகளை அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்த்து பிரசங்கம் செய்தார். இதனால் அரசனின் சினம் அதிகமாகியது.

இதற்கிடையில் அரசனின் அரசவையில் சான்சலராக இருந்த அர்ச். தாமஸ் மோர் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க, தமது பதவியை இராஜினாமா செய்தார். 1533 ஜனவரியில் அரசன் ஹென்றி தான் விரும்பியபடியே தன் மனங்கவர்ந்த ஆன்போலினை இரகசியமாக மணம் செய்து கொண்டான். அதே ஆண்டு ஜூன் முதல் நாளன்று ஆன்போலினை பட்டத்து அரசியாக முடி சூட்டப்பட இருப்பதால், அதனை எதிர்க்கும் மேற்றிராணியார் ஃபிஷர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்கே, அவர் உடல்நலம் குன்றிய போனதால் அவர் மீதான விசாரனை தள்ளிவைக்கப்பட்டது. ஆனால், அதே சமயம் 300 பவுண்டு பணம் அபராதமாய்க் கட்டினால் மன்னிப்பு வழங்கப்படும், என்று அறிவிக்கப்பட்ட சலுகையை ஆயர் மறுத்து விட்டார். அதே நேரத்தில் பாராளுமன்றம் கூட்டப்பட்டு ஹென்றி, ஆன்போலினின் வாரிசுகளுக்கு அரச மகுடம் வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனை ஏற்க மறுத்தவர்கள் 'தேசத்துரோகம்' என்ற குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டனர். அதில் கிறீஸ்தவ நெறிகளும், தேவகட்டளைகளும், பாப்பரசரின்

முழு அதிகாரமும் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்த ஃபிஷர் ஆண்டகை, தாம் தேசத்துரோகி என்ற குற்றம் சாட்டப்பட்டு மரண தீர்ப்பு பெறுவோம் என்பதை உணர்ந்தும் உறுதியுடன் அச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, அதனைக் கண்டனம் செய்தார். அதனால், 1534, ஏப்ரல் 26-ல் லண்டன் டவர் சிறையில் அடைக்கப்பட்டார். நவம்பரில் மீண்டும் 2வது தடவையாக விசாரிக்கப்பட்டு மரணத்தீர்ப்பு பெற்றார். அதோடு அவரின் மேற்றிராணியார் என்ற அந்தஸ்து பறிக்கப்பட்டு அவரது ராச்செஸ்டர் மேறறிராசனம் காலியானது என்று அறிவிக்கப்பட்டது.

## கர்தினாலாக உயர்வு !

இந்த சமயத்தில் (1535, மே யில்) புதிய பாப்பரசராக 3-ம் சின்னப்பர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்தில் நடந்து வரும், பிரிவினை முயற்சிகளையும் அவைகளை தீரத்தோடு எதிர்த்து சிறை தண்டனை அனுபவித்து வரும் மேற்றிராணியார் ஃபிஷரையும் அறிந்தவராக, ஆயர் ஃபிஷரை மரியாதை செய்யவும், அவரது உயிரைக்காக்கும் முயற்சியாகவும் அவரை கர்தினாலாக உயர்த்தினார். கர்தினாலாக உயர்த்தப்பட்டதால் அரசன் சற்றேனும் மதித்து விடுவிப்பான் என்று எதிர்பார்த்த பாப்பரசருக்கு தோல்வியே கிடைத்தது. ஆம் ! பாப்புவின் செயல் அரசன் ஹென்றியை கோபாவேசம் கொள்ளச் செய்தது. ஆயரின் விசாரனையைத் துரிதப்படுத்தி மரண தண்டனையை உறுதி செய்தான்.

ஏற்கனவே, நோயுற்றிருந்த கர்தினால் ஃபிஷரை சிறை வாழ்க்கை வெகுவாகவே பாதித்திருந்தது. உடல் மெலிந்து, எலும்புக்கூடாக காட்சியளித்த அவரை அலைக்கழித்து இறுதியில் ஜூன் மாதம் 17-ம் நாளன்று வெஸ்ட்மினிஸ்டர் ஹாலில் நடைபெற்ற இறுதி விசாரனையின் முடிவில் “தேசத்துரோகி” என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தமது அனைத்து விசாரனைகளிலும் திருச்சபையின் போதனைகளையும், தேவகட்டளைகளையும் எடுத்துக் கூறி அரசனது அனைத்து செயல்களையும் உறுதியோடு கண்டனம் செய்தார் ஃபிஷர் ஆண்டகை.

## வேத சாட்சியம் !

ஜூன் 22-ம் நாள் மரணதண்டனை நிறைவேற்றக் குறிக்கப்பட்டது. அன்று அதிகாலை 5 மணிக்கு கர்தினால் ஃபிஷரின் அறைக்கு வந்த சிறை அதிகாரி அங்கே அவர் அயர்ந்து தூங்குவதைக் கண்டு வியந்து போனான். ஒரு மரண தண்டனை கைதியால் எப்படித் தூங்க முடிகிறது? மரியாதைக் கலந்த வியப்போடு அவரை மெல்ல தட்டி எழுப்பினான். உடனே விழித்து எழுந்தவர், அவனுக்கு நன்றி கூறி தண்டனை நிறைவேற வேண்டிய நேரத்தைக் கேட்டார். “காலை 10 மணிக்கு” என்ற பதிலால் திருப்தியடைந்த ஃபிஷர் ஆண்டகை “நல்லது, என்னை இன்னும் 2 மணி நேரமாவது தூங்க அனுமதிப்பீர்களா? இரவு சரியாகத் தூங்கவில்லை. மரண பயத்தினால் அல்ல “எனது

நோயினாலும், பலவீனத்தினாலும் தான் தூங்க முடியவில்லை" என்று கூறியவர் மெல்ல மீண்டும் படுத்துக் கொண்டார். சற்றைக் கெல்லாம் அயர்ந்து தூங்கிவிட்டவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான் சிறையதிகாரி.

அவர் தூங்கி எழுந்ததும், அவர் எப்போதும் அணிந்திருக்கும் தவச்சட்டையான மயிராடை அகற்றப்பட்டது. சுத்தமான நேர்த்தியான ஆடையைக் கேட்டு வாங்கி, அணிந்து கொண்டவர், "ஆம் ! இன்று எமது திருமண நாளன்றோ! புதிய சுத்தமான உடைதானே அணிய வேண்டும்.?" என்று கூறி தயாரானார்.



"டவர்" சிறைச்சலையை விட்டு வெளியே வந்த அவரை இரு காவலர்கள் ஒரு ஆசனத்தில் அமர்த்தி வாசல்வரைக்கும் தூக்கி வந்தனர். அங்கே இறுதி தீர்ப்பு அறிக்கை வாசித்தலுக்காக காத்திருந்தவர், களைப்பு மிகுதியால் சுவரில் சாய்ந்த வண்ணம் தன்னோடு எடுத்து வந்திருந்த சுவிசேஷப் புத்தகத்தை எடுத்து மன்றாடியவாறு திறந்து கண்ணில்பட்ட பக்கத்தின் வாசகத்தை வாசித்தார் : **"ஏக மெய்யான கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய சேசு கிறீஸ்துவையும் அவர்கள் அறிந்து கொள்வதே நித்திய ஜீவியம். பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் தந்தருளின் வேலையைச் செய்து முடித்தேன்"** என்ற அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 17-ம் அதிகாரம் 3 மற்றும் 4-ம் வசனங்களை படித்தவர், கண்ணீர் பொங்க மகிழ்வோடு வாசித்து ஜெபித்தார்.

நடக்க இயலாத காரணத்தினால் மீண்டும் காவலர்களால் தூக்குமேடைக்கருகே கொண்டு செல்லப்பட்டார். அதற்குள் தண்டனை நிறைவேற்றத்தைக் காண மக்கள் கூட்டம் அங்கே கூடிவிட, கர்தினால் ஃபிஷர் மெதுவாக மேடையின் படிகளில் ஏறலானார். மேடையில் ஏறி நின்ற அவரது முகம் பகல் பொழுதின் சூரிய ஒளியால் பிரகாசித்தது. அவரது வாய் : "நான் எக்காலத்திலும் ஆண்டவரை வாழ்த்துவேன். எப்போதும் அவருடைய மகிழ்ச்சி என் வாயிலிருக்கும்" என்ற 33-ம் சங்கீதத்தை பக்தியோடு உச்சரித்துக் கொண்டிருந்தது.

முகமுடியணிந்த கொலைஞர்கள் இருவர் வழக்கப்படியே, அவரிடம் மன்னிப்புக் கேட்டனர். அவர்களை ஆசீர்வதித்தவரின் உடை களையப்பட்டு கன்னியமான உள்ளாடையோடு மக்கள் முன்னிலையில் சற்று கூச்சத்தோடு நின்றார். கல்வாரியில் நமதாண்டவர் அனுபவித்த


*மானபங்கமான நிலையை தியானித்தவர். தம்மை நோக்கி “ ஐயோ !”என்று அனுதாபக் குரல் எழுப்பும் கூட்டத்தினரை அன்போடு ஆசீர்வத்து, “ கிறீஸ்தவ மக்களே ! கிறீஸ்துநாதரின் கத்தோலிக்கத் திருச்சபையின் விசுவாசத்திற்காக மரிக்கிறேன். இந்த மேலானான மகிமைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். நான் சாவுக்கு அஞ்சவில்லை. உங்களது உதவியைக் கேட்கிறேன். எனக்காகச் ஜெபியுங்கள். எனது தலை வெட்டப்படும் அந்தத் தருணத்திலும் கூட எனது கத்தோலிக்க விசுவாசத்தினை பயத்தால் மறுதலித்துவிடாதிருக்க மன்றாடுங்கள். அரசருக்காகவும், இந்த தேசத்திற்காகவும் ஜெபிக்கிறேன். அரசருக்கு நல்ல ஆலோசகரை அனுப்பும்படி சர்வேசுரனை மன்றாடுகிறேன்” என்று உரத்தக் குரலில் கூறினார். பின்னர், உயிர்பிழைக்கத் தமக்கு வழங்கப்பட்ட கடைசி வாய்ப்பையும் மறுத்து, உதறிவிட்டவர் “* **தேதேயும் நன்றிக்கீதம்** *” பாடினார். பாடி ஜெபித்து முடிந்ததும், காத்திருந்த கொலைஞர்களுக்கு சைகை காட்ட அவரது கண்கள் கட்டப்பட்டன. பின்னர் தமது மெலிந்த கழுத்தை அங்கேயிருந்த கொலைப்பீடத்தில் மெல்ல வைக்க, வாய்* **“சேசு மரியாயே”** *என்ற நாமத்தை உச்சரித்து. உடனே மேலே உயர்த்தியிருந்த கொலைஞரின் கூரிய வாள் சர்ரென்று கீழே இறங்கி தலையைத் துண்டித்தது. தலையற்ற கர்தினால் ஃபிஷரின் உடலிலிருந்து இரத்தம் வெள்ளமென பாய்ந்தோடி தரையை நனைத்தது. அவரது உடல் அடக்கம் செய்யப்பட தலையோ தேம்ஸ் நதி பாலத்தின் கம்பத்தில் காட்சிக்காகத் தொங்கவிடப்பட்டது.*

**அர்ச். ஜாண் ஃபிஷரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**

*- மரியாயே வாழ்க.!*

# ஒரு குவளை தண்ணீர் ஜெபமாலைக்கு ஈடாகுமா?

ஒரு சமயம் அர்ச். ஜாண் போஸ்கோ தமது ஆன்ம குருவான அர்ச். ஜோசப் காஃபேசோக்கு ஒரு குவளை தண்ணீர் குடிக்கக் கொடுத்தார். அதை வாங்கியபொழுது ஜெபமாலை ஜெபம் சொல்வதற்கான மணி அடிக்கப்பட்டு விட்டது. உடனே அர்ச். காஃபேசோ தண்ணீரை அருந்தாமல் குவளையை கீழே வைத்து விட்டு ஜெபிக்க ஆலயம் செல்ல முற்பட்டார். அதைக் கண்ட அர்ச். ஜாண் போஸ்கோ “தந்தையே, தண்ணீர் அருந்தி விட்டு போகலாமே ஜெபத்துக்குத்தான் இன்னும் நேரம் இருக்கிறதே?” என்று கூறினார். அதற்கு அர்ச். காஃபேசோ “ஒரு குவளை தண்ணீருக்கு, நமது பரிசுத்த ஆண்டவளுக்கு மகிமையாகச் சொல்லும் விலை மதிப்பில்லா ஜெபமாலையை விட்டு விடலாமா. குறித்தகாலத்துக்குள் செல்லவேண்டுமல்லவா?” என்று கூறியவாறு ஆலயம் சென்றார்.



# மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்



PH : 0461 -2361989

| | | விலை ரூ. | தபாலில் விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை | 220.00 | 260.00 |
| 2. | உலகின் இறுதிக்காலங்கள் | 125.00 | 140.00 |
| 3. | திருப்பாடுகளின் வரலாறு | 120.00 | 125.00 |
| 4. | அனுதின ஜெபப் புத்தகம் | 50.00 | 60.00 |
| 5. | திருப்பாடுகளின் தியானம் | 90.00 | 100.00 |
| 6. | அறிவோம் பத்துக்கட்டளைகளை | 100.00 | 110.00 |
| 7. | மலைமேல் பிரசங்கம் | 65.00 | 70.00 |
| 8. | அறிவோம் அப்போஸ்தலர்களை; அர்ச். பிலவேந்திரர் | 90.00 | 100.00 |
| 9. | ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள்) | 325.00 | 350.00 |
| 10. | மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு) | 125.00 | 140.00 |
| 11. | கிறீஸ்துநாதர் அநுசாரம் | 150.00 | 160.00 |
| 12. | மரியாயின் மீது உண்மை பக்தி | 125.00 | 140.00 |
| 13. | பாத்திமா காட்சிகள் | 100.00 | 110.00 |
| 14. | பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம் | 60.00 | 70.00 |
| 15. | சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள் | 35.00 | 40.00 |
| 16. | கற்பு என் பொக்கிஷம் | 60.00 | 70.00 |
| 17. | என்னைப் படி அல்லது வருத்தப்பட்டு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது) | 30.00 | 35.00 |
| 18. | ஞான உணர்த்துதல் | 40.00 | 45.00 |
| 19. | **Read Me or Rue It** | 60.00 | 70.00 |
| 20. | என்னைப் படிக்காவிட்டால் நீ வருத்தப்படுவாய் | 75.00 | 80.00 |
| 21. | கத்தோலிக்க வேத சத்தியங்கங்கள் | 45.00 | 50.00 |
| 22. | இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி | 35.00 | 40.00 |
| 23. | ஞான சரீரம் | 35.00 | 40.00 |
| 24. | சலேத் இரகசியம் | 35.00 | 40.00 |
| 25. | மரியாயின் இரகசியம் | 30.00 | 35.00 |
| 26. | தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள் | 30.00 | 35.00 |
| 27. | **The Penny Catechism** | 35.00 | 40.00 |
| 28. | அமலோற்பவ மாமரியின் போரணி | 40.00 | 45.00 |
| 29. | அன்னையை நேசிக்க பன்னிரு படிகள் | 30.00 | 35.00 |
| 30. | மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள் | 25.00 | 30.00 |
| 31. | முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு) | 30.00 | 35.00 |
| 32. | மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம் | 35.00 | 40.00 |
| 33. | வியாகுல மாதா பக்தி | 35.00 | 40.00 |
| 34. | தலைவெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை | 20.00 | 25.00 |
| 35. | உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை | 12.00 | 15.00 |
| 36. | காவல் சம்மனசானவர் | 10.00 | 10.00 |
| 37. | சிலுவைப்பாதை | 15.00 | 1500 |
| 38. | பரிசுத்த ஆவி ஜெபம் | 6.00 | 7.00 |
| 39. | சேசுவின் திரு இருதய மந்திரமாலை | 6.00 | 7.00 |
| 40. | தேவமாதாவின் மந்திரமாலை | 10.00 | 12.00 |
| 41. | அர்ச். சூசையப்பர் பக்திமாலை | 10.00 | 12.00 |
| 42. | அர்ச். சூசையப்பரின் மாந்தை நவநாள் | 8.00 | 12.00 |
| 43. | ஆதித் திருச்சபையின் பத்து வேதகலாபனைகள் | 10.00 | 12.00 |
| 44. | திருச்சபையின் கட்டளைகள் | 10.00 | 12.00 |
| 45. | சேசுவின் இரக்க பக்தி | 10.00 | 12.00 |
| 46. | அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம் | 10.00 | 12.00 |
| 47. | தேவ அழைத்தல்கள் | 35.00 | 40.00 |
| 48. | சின்னக் குறிப்பிடம் | 10.00 | 12.00 |

| | | விலை ரூ. | தபாலில் விலை ரூ. |
|---|---|---|---|
| 49. | அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்) | 25.00 | 30.00 |
| 50. | மனச்செபம் ஒரு விளக்கம் | 35.00 | 40.00 |
| 51. | புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வாழ்க்கை வரலாறு) | 70.00 | 75.00 |
| 52. | பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு - அந்தோனி சேவியர்) | 60.00 | 65.00 |
| 53. | ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது) | 80.00 | 90.00 |
| 54. | மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம் | 35.00 | 40.00 |
| 55. | 33 நாள் தயாரிப்பு: தேவமாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்) | 50.00 | 60.00 |
| 56. | இறுதிக்கால யுகம் | 100.00 | 115.00 |
| 57. | அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு | 100.00 | 115.00 |
| 58. | புதுமைப் புனிதர் தந்தை பியோ | 200.00 | 220.00 |
| 59. | வேத விளக்கம் : ஆசிரியர் : வீரமாமுனிவர் (சங். ஜோசப் பெஸ்கி, சே.ச.) | 150.00 | 160.00 |
| 60. | அன்பின் அரசர் | 150.00 | 160.00 |
| 61. | நரகம் | 60.00 | 65.00 |
| 62. | அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம் | 12.00 | 15.00 |
| 63. | தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம் | 150.00 | 160.00 |
| 64. | புதிய நட்சத்திரம் பிலோமினா | 60.00 | 65.00 |
| 65. | அர்ச். பாஸி மரிய மதலேனாள் | 85.00 | 90.00 |
| 66. | அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள் | 45.00 | 50.00 |
| 67. | ஜெபமாலை ஜெபிப்பது எப்படி? | 10.00 | 12.00 |
| 68. | **A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic** | 50.00 | 55.00 |

**செப்டம்பர் - அக்டோபர் மற்றும் நவம்பர் மாதாங்களின் முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துகள்**

**செப்டம்பர் :** மாதாவின் நித்திய கன்னிமைக்கு எதிராகச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக.

**அக்டோபர் :** மாதாவின் பக்தியை இளம்உள்ளங்களிலிருந்து அகற்றும் நிந்தைக்கு பரிகாரமாக.

**நவம்பர் :** மாதாவின் பக்தி பொருட்களை நிந்தித்தித்து அகற்றும் நிந்தைக்குப் பரிகாரமாக.

## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மணியார்டர் பாரத்தில் உங்கள் தொலைபேசி / அலைபேசி எண்ணைக் குறிப்பிடுங்கள்.
2. மாதா பரிகார மலரை உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி பரப்ப உதவுங்கள். (எங்களுக்கு உதவி செய்கிற உங்கள் அனைவரின் ஆன்ம சரீர நலன்களுக்காகவும் தினமும் எங்கள் ஜெபத்தில் வேண்டுகிறோம்.)
3. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா - ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
4. மாதா பரிகார மலர் சாந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் கீழ்கண்ட பெயரில் உங்கள் மணியார்டர்கள், D.D.s. மற்றும் காசோலைகளை அனுப்புங்கள்.

A/c Name : SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code : SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch. Tuticorin

**அனுப்ப வேண்டிய முகவரி :**


மாதா அப்போஸ்தலர்கள் சபை,
ரோஸா மிஸ்திக்கா,

11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி. மேல்நிலைப் பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628002.

போன் : 0461 2361989, அலைபேசி : 9487609983. Email : tutirosamystica@gmail.com


சந்தா, நன்கொடை செலுத்த :

Google Pay **9487609983**

# உலக ஜெயராக்கினி சகாயமாதா ஆலயம்



கட்டப்பட இருக்கும் ஆலயத்தின் தோற்றம்



ஆலயத்தின் தற்போதைய கட்டுமான தோற்றம்

பாத்திமாவில் தேவ மாதா கேட்டுக் கொண்டுள்ளபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகாரப் பக்தியை (முதல் சனி பக்தி) கடைப்பிடித்து பரப்புவதும், மரியாயின்மீது உண்மையான பக்தியை பரப்புவதும், அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் முறைப்படி மாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் பொருட்டு 33 நாள் தயாரிப்பைக் கடைப்பிடிக்கச் செய்து மாதா அப்போஸ்தலர்களை ஏற்படுத்துவதும், சேசுவின் திரு இருதய பக்தியை (துலைவெள்ளி பக்தி) பரப்பவும், ஜெபமாலை மற்றும் உத்தரியத்தின் மீதான பக்தியைப் பரப்பவும், ஜெபத்தையும், தவத்தையும், பரிகாரத்தையும் மக்கள் கடைப்பிடித்து வாழச் செய்வதையும், நல்ல கத்தோலிக்க புத்தகங்களை வெளியிட்டு, ஞான உபதேச அறிவையும், விசுவாசத்தையும், தேவ சிநேகத்தையும் வளர்ப்பதும் எங்கள் சபையின் நோக்கமாகும்.

**ஆலயத்தை கட்டி முடிக்க தேவையான தொகை ₹ 53,50,00/-** **(535 x ₹ 10,000/-)**

**ஒரு சதுர அடி ₹ 2800/-** **1070 x ₹ 5,000/- = ₹ 53,50,00/-**

**மொத்த சதுர அடி** (sq.ft.) **4200** **தங்களது உதவியை வேண்டுகிறோம்.**

**முகவரி**

**மாதா அப்போஸ்தலர்கள் சபை,**
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம், தூத்துக்குடி.
தொலைபேசி : **0461 2361989**
அலைபேசி : **94876 09983**
E-mail : tutirosamystica@gmail.com

**வங்கி விபரம்**

Account Name : Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code : IOBA001218
Indian Overseas Bank,
Mappilaiyurani Branch,
Thoothukudi.

**II$^{nd}$ Class Vestment**
**Material - Poly cotton**
**Including stole manipul**






**Reversible weightless vestment for travel purpose**
**Material - Poly cotton**
**Chalice veil and burse**




**(Double colour)**

**Pastrol Stoles**
**Material - Poly cotton**




**Pastrol Stoles**
**Pure Silk With Embroidary & Hand Work**









**Surplices can also be made with Design at an Extra Cost of Rs 1000**

**Altar boys surplice (Cotton) with Cassock (Viscose & Poly)**




**We can also make Copes, Altar covers and all litrugical items**

**NIRMAL VESTMENTS**
8A/2, Seevelaperi Road, Annie Nagar Palayamkottai.
Cell No : 63852 80103



## அர்ச். அசிசி பிரான்சிஸ்கு பிரார்த்தனை மன்றாட்டு ஜெபம்!

முத்தரான எங்கள் பிதாவாகிய அர்ச்சியசிஷ்ட பிரான்சிஸ்குவின் புண்ணிய பேறுகளினால் உமது திருச்சபையை ஒரு புது சந்நியாச சபையாலே பெருகச் செய்தருளின சர்வேசுரா, அவருடைய பாவனையாகப் பிரபஞ்சக் காரியங்களைப் புறக்கணிக்கவும். பரலோக வரங்களுக்கு எப்போதும் பங்காளியாயிருப்பதனால், அகமகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும் சுவாமி. இந்த மன்றாட்டை சேசுகிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென்.

**அர்ச். அசிசி பிரான்சிஸ்கு திருநாள் : அக்டோபர் - 4**

மாதா பரிகார மலரில் விசுவாசத்திற்கோ, நல்லொழுக்கத்திற்கோ, கத்தோலிக்க திருச்சபைக்கோ அதன் போதனைகளுக்கோ உண்மையான பக்திக்கோ மாறுபாடான எந்தக் கருத்தும் வெளிவராது.

– மாதா பரிகார மலர் குழு

**MATHA PARIKARA MALAR**
**ROSA MYSTICA**
**(Opp. V.V.D. H. Sec. School)**
**SAHAYAMATHAPATTANAM**
**TUTICORIN - 628 002.**
**PH: 0461 - 2361989**
E-mail: tutirosamystica@gmail.com

மாதா பரிகார மலர்
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy , Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.

Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Editor: Sammanasu Francis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.